www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாதஇதழ்

சுவடி : 7.7 திருவள்ளுவர் ஆண்டு 2049

14.11.2018 - 13.12.2018

ISSN : 2195-6480




FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


TKS
BESTFOODS
Rheinische Strasse 79
44137 Dortmund
Mobile : 0151 25 300 400
fax: 0231/95046882
tel: 0 231/ 95046883
TKS
BEST FOODS
www.tks-bestfoods.de
info@tks-bestfoods.de
உங்களின் அன்றாட தேவைகளுக்கும்
உங்களின் வேண்டுகோளுக்குமிணங்க
தரம் என்ற தாரக மந்திரத்துடன்
நியாயமான விலைகளுடன்
பலசரக்குப்பொருட்கள்
மரக்கறி வகைகள் மற்றும்
மீன் வகைகள் எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.

# DER VERBESSERTE SUPER-TARIF

ortel MOBILE







**19,99€[15)] /4 Wochen**

## ஒரே சிம்மில் இருந்து... யேர்மனிக்கு முற்றிலும்

# இலவசம்


**ஐரோப்பா, இந்தியா மேலும் பல நாடுகளுக்கு 250 நிமிடங்கள்**

## 4GB Internet

**NEU: Deutschland Flat**

- 250 Minuten aus Deutschland in 50 weitere Länder
- Internet Flat ~~3 GB~~ 4 GB
- Surfen&Telefonieren in der EU
- Deutschland Flat

**ஐரோப்பிய நாடுகளில் இருந்து பயன்படுத்தலாம்**
**4GB முடிந்தால் மீண்டும் 9 யூரோக்களுக்கு பெற முடியும்**



**Nur Festnetz

www.ortelmobile.de    Ortel. In über 220 Länder sprechen. Powered by e·plus+



**AKARAM**

# அகரம்


மாதாந்த இதழ் Monthly Magazine

14.கார்த்திகை 2018 13.மார்கழி 2018

சுவடி / ISSUE 7.7



**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்னை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

**www.akaram.eu**



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும்,**
**விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும்**
**வணக்கம்...**

**மு**

**த[illegible] இந்த மாதம் மாவீரர் தினத்தை எம் மக்கள் மிகவும் சி[illegible]யோடும், ஆன்ம ஈடுபாட்டோடும் மிகப் பெரும் எ[illegible]க்கையில் வணக்கம் செலுத்த வேண்டும் என அகரம் கேட்டுக் கொள்கிறது. காரணம், வருகின்ற மார்ச் மாத அமர்வில் ஐ.நா. மனித உரிமை ஆணைச் சபைக்கு தமிழ் மக்கள் தமது போராட்டத்தில் உறுதி தளராமல் இருக்கிறார்கள் என்கிற செய்தியை, உலகில் நடைபெறும் மாவீரர் அஞ்சலி உணர்த்துவது மிகவும் அவசிய தேவையாக தெரிகிறது. மேலும், இளையோரும் சிறுவர் சிறுமியரும் மிக அதிக அளவில் ஈடு படுத்தப் படுவது நீண்ட காலத் தேவையாக உள்ளது. அப்பொழுதுதான் தாயக மீட்பு வலுவாக, உறுதியாக பயன்தரும்.**

இலங்கை அதிபர் மைத்திரி எதிர்பார்க்கப் பட்டது போலவே மீண்டும் மகிந்தரோடு இணைந்து கொண்டு, தமது அரசியல் பயணத்தைத் தொடரும் வேலையில் இறங்கி விட்டார். இருவரது கட்சிகளும் இணைந்து விட்டன. எனவே, அதிரடியாக யாரும் எதிர்பாராத வேளையில் மகிந்தரை பிரதமராக்கி, ரணிலின் பதவியைப் பறித்து விட்டார். பாராளுமன்றத்தைக் கலைத்து, அடுத்த தேர்தலுக்கான தேதியையும் அறிவித்து விட்டார். தேர்தல் ஆணையத்தின் உறுப்பினரான ரட்ணஜீவன் ஹூலே மைத்திரியின் செயற்பாடுகள் சட்ட விரோதமானது என உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

உள்ளாட்சித் தேர்தலில் மகிந்தர் அணி பெரும் வெற்றிகளைக் குவித்த பொழுதே, மைத்திரி மகிந்தரின் அரசியல் பலத்தை உணர்ந்திருக்க வேண்டும். நாமல் - ராஜபக்ச இவர்களின் இணைவு தொடர்பாக கடந்த சில மாதங்களாக பேசப் பட்டது என கூறியுள்ளார். அண்மையில் சுப்பிரமணியன் சுவாமி வந்து மகிந்தரையும், கூட்டமைப்பு தலைவர்களையும் டில்லிக்கு அழைத்துப் போய் வந்த படியால் இந்த மாற்றங்கள் இடம் பெறும் சாத்தியம் பற்றி கூட்டமைப்புக்குத் தெரியாமல் இருக்க முடியாது.

மேலும், இந்திய-சீன அரசுகளின் மேலாதிக்க இழுபறிகளே முக்கிய காரணமாகத் தெரிகிறது. எனவே, இது இலங்கையில் தீர்மானிக்கப்பட்ட விடயமாகத் தெரியவில்லை. சம்பந்தன், சுமந்திரன் இந்தியாவின் முடிவுக்காகக் காத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் முடிவு அமெரிக்காவின் குரலாகத்தான் இருக்கும். ஆனால், மகிந்தருடன் மைத்திரி இணைந்தமையானது, அது சீனாவின் ஆதிக்க வலுவை பலமிக்கதாகக் காட்டிவிடும்.

வடபகுதியில் முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனும், அனந்தியும், கஜேந்திர குமாரும் சுரேஸ்

பிரேமச் சந்திரன் டக்லஸ் என ஆளுக்கொரு கட்சி என வட பகுதி மக்களைக் கூறு போட, தென் பகுதி சிங்களக் கட்சிகள் சுலபமாக அறுவடை செய்து விடும் ஆபத்தை எமது இனம் எதிர் கொள்கிறது. அப்படியான ஒரு நிலை 2009 முள்ளி வாய்க்கால் பேரழிவை விட, மோசமாக ஆகிவிடலாம். ஆக மொத்தம் இந்த ஆண்டு மைத்திரி - மகிந்தர் இணைவால் தமிழ் மக்களுக்கு மேலதிகமாக ஒரு முள்ளி வாய்க்கால் காத்திருக்கிறது.

உடனடியாக தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக மகிந்தர் கூறி வருகிறார். இதனைச் செய்து முடிக்க மைத்திரிக்கும், ரணிலுக்கும் இல்லாத முதுகெலும்பு மகிந்தருக்கு உள்ளதை எவரும் மறுக்க முடியாது. எனவே, அதற்காகவாவது மைத்திரியின் வருகை வரவேற்புக்கு உரிய ஒன்றாகவே அகரம் கருதுகிறது.

எக்காலத்திலும் அகரம் சிங்களத்தின் அரசமைப்பையும், பாராளுமன்ற அரசியலையும் ஆதரிக்கவும் முடியாது, ஏற்கவும் கூடாது. எனவே கூட்டமைப்போ, எந்தக் கூழ் முட்டையோ, எவருடனும் ஆட்சியில் பங்கு பெற்றால் அகரம் கவலைப் படாது. தமிழ் இனத்துக்குத் தனியான தன்னாட்சி அதிகாரம் கொண்ட சுதந்திர அரசு ஒன்றுதான் நீடித்த நிலையான பாதுகாப்பும், அமைதியும் தர முடியும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு.

வடமாகாண முதல் அமைச்சர் தனியாக ஒரு அரசியல் கட்சி அமைத்ததை, நாம் ஆழ்ந்த கவலையோடு பார்க்கும் நிலையில்தான் இருக்கிறோம். கட்சி அடையாளம் இல்லாத பொது மக்களின் அரசியல் அமைப்பாக, சர்வதேச அரசுகளுடன் எமக்கான தீர்வைப் பெறப் போராடுவதே சிறந்த வழியாகப் பார்க்கிறோம்.

இந்த இதழில் பெண்களின் அரசியல் தலைமை தொடர்பான கட்டுரை, தமிழருக்கான புதிய அரசியல் தலைமை பற்றிய புதியப் பார்வையை வைக்கிறது. மாறி வரும் உலகில,; எமக்கான அரசியல் தலைமை மாற்றமும் அவசியம் என உணர முடிகிறது. உலகத் தமிழினம் குறிப்பாக, ஈழத் தமிழினம் பெண்களின் அதிகரித்த ஆளுமையும், பங்களிப்பும் அரசியலில் இடம் பெறுவதை உறுதி செய்வது காலத்தின் தேவை எனலாம்;. மீண்டும் நலம் வேண்டி விடை பெறும்,

**ஆசிரியர், அகரம் குழுமம்**



த.எதிர்மன்னசிங்கம்

# இப்பொழுது நான் உங்க வீட்டுப் பிள்ளை

இது மாவீரரின் அஞ்சலிக்கும், நினைவுகளிலும் தமிழ் மக்கள் கண்ணீரும், மலர்களும் கொண்டு இழப்புகளின் கவலைகளை அழுது தீர்க்கும் காலம். அதே நேரத்தில் தோல்வியால் துவண்டு சோர்ந்து விடாமல் புதிய எழுச்சி பெற்று, புதிய உலகம் படைக்கப் போராட எழுச்சி பற்றிய உணர்வுகளை உரமேற்றி உழைக்க திட்டமிடும் காலம். அப்படியான நேரத்தில் 'நான் உங்க வீட்டுப் பிள்ளை' என்ற பாசக் குரலோடு வருகிறார் கடந்த 5 ஆண்டுகளாக வடமாகாண மக்களின் காவல் தெய்வமாக, கண்ணீரைத் துடைக்கும் கரங்களாக விளங்கி வரும் வட மாகாண முதலமைச்சார், முன்னாள் உச்சமன்ற நீதியரசர் திரு.சி.வி.விக்கினேஸ்வரன்.

அவரது பதவிக்காலம் முடிவுற்று, அமைதியான ஒய்வு வாழ்க்கையா? அல்லது அமைதி தேடி அலையும் மக்களுக்கு அபயம் தேடிக் கொடுக்கும் அமைதி அற்ற மக்கள் அரசியல் சேவை வாழ்க்கையா? என்கிற காலத்தின் கட்டாயமாக எழுந்த கேள்விக்கான விடையைத் தேடும் விக்கினேஸ்வரனின் முடிவை மனிதாபிமானம் கொண்ட எவரும் எதிர்க்க மாட்டார்கள்.

அகரமும் எதிர்க்கவில்லை. அவர் முதன் முதலாக வேட்பாளராக தேர்தலில் சம்பந்தனால் நிறுத்திய பொழுதே அகரம் அவருக்காக கவலை தெரிவித்தது. ஆனால், அன்று அகரம் எதிர்பார்த்த அத்தனையும் இன்ற நடப்பதைக் கண்ட பின்னரும் அவருக்காக அனுதாபம் கொள்ளாமலும், எச்சரிக்காமலும் விட்டு விட முடியவில்லை.

எங்க வீட்டுப் பிள்ளை எனச் சொந்தம் கொண்டாடி வரும் வட மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரைச் சிறு பிள்ளை என வெறுமனே தள்ளி விட முடியாது. அதே நேரத்தில் பிள்ளை இல்லாத வீட்டிலே கிழவன் துள்ளி விளையாடுகிறான் எனக் கேலிசெய்ய அவருக்கு நிறையவே எதிரிகள் உள்ளனர். இளமையும், உடல் வலுவும் உள்ள காலத்தில் ஒரு சிறிதாவது அரசியல் போக்கிரிகளின் தில்லு முல்லுகளைத் தெரிந்திருப்பார் என்றால் 1947ல் சாமுவேல். ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் செய்த தவறை, இன்று இவர் செய்ய முன் வரமாட்டார்.

செல்வாவை தொடக்க காலத்தில் வழிநடத்தி வெற்றி நடை போட வைத்தவர் கோப்பாய் பிரதிநிதி திரு.கு. வன்னியசிங்கம்





யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி
நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
2018ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள், சிறுவர்களுக்கான
ஆடை வகைகள் மற்றும் அனைத்து
கவறிங் நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்
சுஜிதா
Sujitha Frizen food
Sujitha
கடந்த 15 வருங்களுக்கு மேலாக தரத்திலும்,
சுவையிலும் தடம்பதித்துள்ள ஒரு நிறுவனம்.
சுவையான உணவுக்கு
சுஜிதா
CHILLY ONION POROTTA
MASALA POROTTA
ALOO POROTTA
Porotta
SWEET COCONUT POROTTA
Idlly with Sambar
இட்லி, சாம்பார்
Germuse Samosa
Parippu Vada
VTM Minimakrt
Neudorferstr. 173
47057 Duisburg
Contact
Kunjan
0177 3509655
அனைத்து தமிழ் வர்த்தக
நிறுவனங்களிலும் பெற்றுக்
கொள்ளலாம்



அவர்களே!. காங்கேசன்துறைத் தொகுதி வன்னிய சிங்கம் அவர்களின் பிறந்த இடம். 1952ல் செல்வா தோற்கடிக்கப் பட்ட பொழுதிலும் அடுத்துவரும் தேர்தல்களில் அவரை வெற்றி பெற வைத்தது திரு.வன்னியசிங்கம் அவர்களின் குடும்ப பாரம்பரியமும், மக்கள் நலன் சார்ந்த செல்வாக்கு மட்டுமே!. திரு. வன்னிய சிங்கம் அவர்கள் அகால மரணம் அடைந்த பின்னரும், செல்வா வாழும் காலம் வரை அதே தொகுதியில் வெற்றி பெற முடிந்தது என்றால் அப்படியான அடித்தளத்தை அவருக்கு ஏற்படுத்தி வைத்தார் என்பதே உண்மை.

இன்று திரு. விக்கினேஸ்வரனுக்கு அப்படி ஒரு பக்க பலம் உள்ளது என எவராலும் சொல்ல முடியுமா? செல்வாவை தந்தை என்றும், ஈழத்துக் காந்தி என்றும் பப்பாசி மரத்தில் ஏற்றி வைத்து தம்மை வளர்த்துக் கொண்டவர்களால் அவரது அரசியலும், தமிழ் மக்களின் வாழ்வும் நாசமானதை இன்று எவராலும் மறுக்க முடியாது. அவர் சிங்களத்தால் ஏமாற்றப் பட்டதை விட அவரோடு ஒட்டி உறவாடி உடன் இருந்தவர்களால் அவரும் அவரது அரசியலும் கண்ட இழப்புகள்தான் அதிகம்.


1972 அரசமைப்புச் சட்டத்தை எதிர்த்து வழக்கைக் கூட தாக்கல் செய்ய முன்வராத அவரது கட்சி, அவரை பலவந்தமாக பதவி விலக வைத்து, பல வருடங்கள் வருமானம் இன்றி தவிக்க வைத்தது. பஸ் வண்டியில் பயணம் செய்து அறியாதவர் எங்கே? எந்த பஸ் எடுப்பது? எனத் தெரியமல் தடுமாறி கொழும்பு நகரசபை வீதியில் தவித்து நின்றவரை, இருவாலிபர்கள் அவரை பஸ்ஸில் ஏற்றிப் போய் சுதந்திரன் அசகத்தில் அவர் கேட்டபடி கொண்டு போய் விட்டனர்.

அதன் பின்னர் அவர் எங்கு, எவ்வாறு வீடு போய்ச் சேர்ந்தார்? என்பது தெரியாது. அப்படியான அனுபவங்களைக் கண்ட பின்னர்தான் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் எனக் கையை விரித்தார்.

சத்தியாக் கிரகத்தின் பொழுது மக்களிடம் இருந்து பெறப்பட்ட நிதியின் தொகை, யாருக்கும் தெரிந்து கொள்ள முடியவில்லை. அது பற்றிக் கணக்கு விபரம் கேட்ட அன்றைய கிளிநொச்சித் தொகுதி உறுப்பினர், நீர்ப்பாசனப் பொறியிளாளர் திரு.சிவசுந்தரம் உள்ளிட்ட பலரை கட்சி வெளியேற்றியது. பின்னர் அந்த நிதியின் பெரும்பகுதி கொழும்பு பம்பலப்பிட்டி டொனவன் அன்றியின் சூதாட்டக் கழகத்தில் கரைந்ததாகப் பேசப்பட்டது. மறு பகுதி யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டில் இருந்து திருடு போனதாகக் கதை பரவியது.

இத்தனைக்கும் அரசாங்க தமிழ் எழுது வினைஞர் சங்கம் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து கொழும் மாவட்ட நீதி மன்றத்தில் போராடி, நீதிபதி ஓ.எல்.டி.கிரெஸ்டர் சிங்களச் சட்டம் ஒருதலைப் பட்சமானது, தீய சட்டம் எனத் தீர்ப்பளித்தார். அரசு உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்து பழைய முடியாட்சி சட்டத்தின்படி வழக்காடும் உரிமை வாதிக்கு கிடையாது என தீர்ப்பைப் பெற்றது.

வழக்கை மிகப் பெரும் செலவில் பிரித்தானிய பிரபுக்கள் சபைக்கு மேன் முறையீடு செய்த நிலையில், 1965ல் தேசிய அரசு அமைத்த தமிழரசுக் கட்சி அந்த வழக்கை மீளப் பெறச் சொல்லி வற்புறுத்தி, அந்த வழக்கில் தலைமை வக்கீலாகச் செயற்பட்ட திரு.மு.திருச்செல்வம் அமைச்சரானதால் சங்கம் மிகப் பெரும் இடர் பாடுகளின் மத்தியில் வழக்கை நடத்தி இலங்கையின் உச்சநீதி மன்றமே மீளாய்வு செய்ய வேண்டும் எனத் தீர்ப்பை பெற்றது.




உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கான
ஒரே இடம்
044 803 47 47
078 300 90 90
Airport Transfer
VIP Service
Limousine
Reisebusse
Kleinbusse
Gruppen-Transfer
SWISS RENT A CAR
SRAC
Swiss Rent a Car GmbH
Schaffhauserstrasse 137
8302 Kloten
www.swissrentacar.ch
அனைத்து வாகனத் திருத்த
வேலைகளுக்குமான ஒரே இடம்
Reifenwechsel
Auto Diagnostik
Karosserie
Klimaservice
MFK Bereitstellung
Bremse und Stossstange
Autoradio Montage
Reinigung und Polieren
Sonstige Reparaturen
Ersatzwagen
KGS
Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02

அந்த வழக்கில் இருந்து தப்பிக்கவே ஸ்ரீமாவோ குடியரசுப் பிரகடனம் செய்தார். **அதற்கும் குமாரசூரியர் எம்.சி. சுப்பிரமணியம் என்ற இரண்டு தமிழர்களை நியமன உறுப்பினர்களாக்கி, அரசமைப்புச் சட்டத்தை நிறை வேற்றினார்.** தமிழரசுக் கட்சி பிரபல சட்டத்தரணிகளின் கூடாரமாக இருந்தும் கூட, இந்த வழக்கில் உதவ முன் வரவில்லை.

1972 குடியரசு பிரகடனச் சட்டம் அரசமைப்பின் 29.2 பிரிவுகளை மீறியது எனத் தெரிந்தும், செல்வாவினால் வழக்குத் தொடர முடியவில்லை. வழக்கைத் தொடுத்த சீ.சுந்தரலிங்கம் கூட பாதியிலே நிறுத்தி விட்டார்.

1976ல் வட்டுக் கோட்டைப் பிரகடனம் பழைய கடுதாசிக்குக் கூட பெறுமதி அற்றதாக்கப்பட்டு விட்டது. ஆனால், 1977 தேர்தலில் அமிர்தலிங்கத்துக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவியை அது பெற்றுக் கொடுத்தது.

அதற்குப் பதிலாக அவர் தமிழ் மக்களுக்கு வாங்கித் தந்த பரிசுதான் 1982ம் ஆண்டின் பயங்கர வாத தடைச் சட்டம். அந்தச் சட்டம்தான் 2009ல் தமிழின அழிப்புக்கும், தமிழ் மண் பறிப்புக்கும், இன்றைய இராணுவ ஆட்சிக்கும் மூல வித்து. இன்று ஒன்றுக்கும் பயன்படாத



மாகாணசபை உரிமை பற்றிப் பேசினாலே பயங்கரவாத தடைச் சட்டம் உங்கள் மீது பாயாது என்பதற்கு என்ன உத்தர வாதம்?

உங்களை எங்க வீட்டுப் பிள்ளையாக ஏற்பதில் அகரம் இரட்டிப்பு மகிழ்சியை தெரிவிக்கிறது. எங்கள் பிள்ளைகளை இழந்து தவிக்கும் இனமாக நாம் இருக்கிறோம்.

**திரும்பிய பக்கம் எல்லாம் காட்டிக் கொடுக்கும் கூட்டம். நாலா பக்கமும் நாட்டைக் கூறுபோடும் வல்லரசுகள். பாராளுமன்ற அரசியலால் எல்லாவற்றையும் இழந்து விட்டோம். இனி எதுவும் பெற முடியாது என்ற நிலையில் இந்தப் பாராளுமன்ற அரசியல் தேவையா? கொஞ்சம் மாற்று வழி பற்றி யோசித்தால் என்ன?**

ESSEN மாநகரில்...

APIRAAMI ENTERPRISE


அனைத்து விதமான மளிகைப் பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள் மிகக் குறைந்த
விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

VALUTRANS
Weltweit
Geldtransfer
Service

SENDEN SIE
GELD WELTWEIT

Pferdemarkt- 9
45127 Essen
0201 / 236925

# தமிழ் அறிஞர்கள் 09



## அமரர் வித்துவான்
# க.வேந்தனார்

வாசக நண்பர்களே! தமிழ் அறிஞர்கள் வரிசையில் இந்த இதழில் நாம் வாழ்ந்த காலத்தில் நம்மோடு வாழ்ந்த முதுபெரும் தமிழ் அறிஞர் வித்துவான் வேந்தனார் அவர்களை நினைவு கூர்வதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன். ஒன்று... அன்னார் பிறந்த நூற்றாண்டு தினம் இந்த மாதம் (05-11-18) வருவதனால் அவரை அகரம் வாசகர்களும் நினைவு கூர்வதற்கு ஒரு வாய்ப்பாகின்றது. இரண்டாவது... இந்தத் தமிழ்ப் பெருந்தகை இன்று யாழ் பல்கலைக் கழகமாக விளங்குகின்ற அன்றைய பரமேஸ்வராக் கல்லூரியில், இவர் தமிழாசிரியராக இருந்த காலத்தில், ஒருசில வருடங்கள் நானும் இவரிடம் மாணவனாக இருந்தேன் என்னும் பெருமையோடு!

அமரர் வித்துவான் வேந்தனார் அவர்களை நன்கு அறிந்த அறிஞர்கள் பலரும் பல்வேறு இடங்களில், பல்வேறு கோணங்களில் இவரைப்பற்றி வியந்து பேசியும், எழுதியும் வந்துள்ளார்கள். இவர் தலைசிறந்த உரையாசிரியர்! நனி சிறந்த கட்டுரையாளர்! மிகச்சிறந்த குழந்தைப் பாடலாசிரியர்! ஆற்றல் மிகுந்த கவிஞர்! பேராண்மை மிக்க சொற்பொழிவாளர்! தனித்தமிழ் பற்றுமிக்க தமிழ்ப் பேரன்பர்! சைவ சித்தாந்த தத்துவங்களை நன்கறிந்த சித்தாந்த சிரோன்மணி! என பல் துறைகளிலும் சிறப்புற்றிருந்த அமரர் வேந்தனார் அவர்கள் மாணவர்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட பெரும் தமிழ் ஆசானுமாவார்!

அன்னாரின் நூற்றாண்டு பிறந்த தினத்தையொட்டி வேந்தனாரின் ஆசிரியத் தகமையின் சிறப்பினை விதந்து போற்றி, அவருடன் நீண்ட காலம் சக ஆசிரியராகப் பணியாற்றிய ஆசிரியர் ஐ.ஆர். அரிய ரத்தினம் B.Sc., அவர்கள், 1966ம் ஆண்டு ஐப்பசி மாத மல்லிகை இதழில் எழுதிய கட்டுரையை இங்கு பிரசுரம் செய்து, அமரர் வேந்தனார் அவர்களுக்கும்... அவர் தமிழ்மீது வைத்திருந்த பற்றுதலுக்குமாய் மரியாதை செய்கின்றோம்.

### ஐ ஆர் அரிய ரத்தினம்

தமிழ் ஒலித்த இடமெல்லாம் தன் நாமம் ஒலிக்கும்படி வாழ்ந்த தமிழ் வேந்தனாம் வித்துவான் வேந்தனார் அவர்களின் மறைவு, தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு பேரிழப்பாகும். நான் யாழ்ப்பாண பரமேஸ்வராக்

கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில், என் உடனாசிரியாகப் பல வருடங்கள் கடமையாற்றியமையினால் இவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.

அமைதியும், ஆடம்பரமுமற்ற ஒரு தமிழ் ஆசிரியன் என்றுதான் பலர் அவரை அறிவர். அவருடன் நெருங்கிப் பழகியவர்கள், அவரை உற்று நோக்கியவர்கள், அவரிடம் நிறைந்திருந்த ஆழ்ந்த புலமையையும்,

ஞானத்தையும் கண்டிருப்பர். இவர் சில குறை குடங்களைப் போல பயனற்ற வெட்டிப்

**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33**
**0231 950 979 00**

Münster மாநகரத்தில்
28 ஆண்டுகளாகத் தமிழ் மக்களின்
நன்மதிப்பினைப் பெற்ற...




# TTS BROTHERS

## Asien Supermarkt

சமையலுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

நம்பிக்கை நாணயம் நேர்மை



**TTS ஆசியா சூப்பர் மார்கட்**

**0251 1365194**
**wolbeckerstr.27**
**48155 Münster**

பேச்சுப் பேசி, போலிக் கௌரவத்தை நிலைநிறுத்த முயற்சித்த வரல்ல. அவர் ஒரு நிறைகுடம். அவருடன் நெருங்கிப் பழகியவர்கள், அவரிடம் நிறைந்திருந்த பரந்த இலக்கிய அறிவையும், தமிழ்ப் பண்பாட்டின் திறனையும் கண்டு, மூக்கின்மேல் விரலை வைத்து அதிசயிக்க தவறவில்லை. கற்கண்டின் சுவை அதனை உமிழ்பவர்களுக்கே தெரியும்.

கல்லூரி வகுப்பறைக்குள் சென்று பார்த்தால், அவருடைய தமிழ் இலக்கியப் பற்றைக் காண எளிதாக இருக்கும். தமிழையும், தன்னையும் அவர் வேறாக நினைத்தவரல்ல. தமிழே அவர் மூச்சு. தன் கடமையில் கண்ணும் கருத்துமாகவுள்ள அவர், பாட ஆரம்ப மணி அடித்தவுடன் வகுப்பறைக்குள் பிரவேசித்தால், வகுப்பையே தன் உலகமெனக் கருதி, வகுப்பிற்கு வெளியே நடைபெறும் பூசல்களைக் கவனியாது, மாணவர்களுக்கு இலகுவில் புரியத்தகுந்த விதத்தில், மாணவர்களே விரும்பிப் படிக்கத் தகுந்த முறையில் பாடத்தை நடத்துவார். அவர் பாடம் நடாத்தும் முறையைப் பார்ப்பவர், இலக்கியத்தை வேப்பங்காயாக் கருதுபவர்கூட, இலக்கியத்தை விரும்பிக் கற்பர். இனிக்கும் கரும்பாக எண்ணுவர், சுவைப்பர்.

இலக்கியத்தில் இறங்கி விட்டால், பாடம் முடிவதற்கான மணியடித்தல் அவர் காதிலோ, அவர் மாணவர் காதிலோ விழுவதில்லை. அவ்வளவு தூரத்திற்கு பாடத்தில் மெய்மறந்து - பாத்திரமாக மாறிக் கொண்டிருப்பர் - இருபகுதியினரும்.

மாணவர்களை, மாணவர்களாக மாத்திரம் கணிக்காது தான்பெற்ற குழந்தைகளைப் போல் பேணி, அவர்கள் மனத்தில் பதியத்தக்க முறையில், அவர் பாடம் சொல்லிக் கொடுப்பதினால், மாணவர்களும் அவரை ஆசிரியர் என்று மாத்திரம் எண்ணாது, ஒரு இலட்சியத் தந்தையாகக் கருதி, அவர் மீது அன்பும், பக்தியும் கொண்டுள்ளனர்.

கல்வி கற்கும் மாணவர்கள் கருத்தில், கற்கும் பாடத்தில் ஆர்வமேற்படச் செய்தலே ஆசிரியரின் திறமையைக் காட்டும். பல ஆசிரியர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து, தாங்கள் கற்பிக்கப் போகும் பாடத்தை ஆயத்தப் படுத்தி, மாணவர்களுக்கு வாழைப்பழத்தை உரித்துத் தீத்துவது போல் கற்பிக்கின்றனர். இது மாணவர்கள் மனதில் பதிவதுமில்லை. அவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டுவதுமில்லை. இது ஆசிரியரின் திறமையின்மையைக் காட்டுகின்றது. இதற்கு விதிவிலக்காக, வித்துவான் வேந்தனார் அவர்கள், தான் தமிழ் மொழியில் இலக்கியத்தில் கொண்டுள்ள பற்றை தர்க்கரீதியான வாதத்துடன், பண்புடன் விவாதம் செய்து, மாணவர்களுக்குப் பற்று ஏற்படச் செய்யும் திறமையுடன் போதிப்பார்.

அவர் பாடத்தை ஆயத்தப்படுத்த வேண்டிய நிலைமையில் என்றுமே இருந்ததில்லை. ஒரு கவிதையை அவர் விளக்க எடுத்தால், அந்தக் கவிதையின் இலக்கணத்தை, அதன் அமைப்பை, செறிந்திடும் நயத்தை - இலக்கிய தாரதம்மியத்தை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து பல்வேறு கவிதைகள் மூலம் விளங்கப்படுத்துவார். ஒரு கவிதை படிக்க வேண்டிய மாணவர்கள் அவர்களே விரும்பும் வண்ணம் பல இனிய கவிதைகளைப் படிக்கக் செய்யும் பாங்கு வித்துவான் வேந்தனாரிடம் கூடப்பிறந்த சொத்து.

அவர் ஒரு தமிழ்க்கடல். அதிகமாகக் கடலில் முத்துக் குளிப்பவர்களுக்கு கிடைப்பது வெற்றுச் சிப்பியே!. வித்துவான் வேந்தனார் என்ற தமிழ்க் கடலில் முத்துக் குளிப்பவர்களுக்கு கிடைப்பது வெற்றுச் சிப்பியல்ல. அத்தனையும் முத்துச் சிப்பிகளே!. அவருடைய மாணவர்களில் தமிழ்ப்

பாண்டியத்திலோ, தமிழ் இலக்கியத்திலேயோ சித்தியெய்யாதவர் யாருமில்லை. இது அவருடைய ஆசிரியத் தொழிலின் வெற்றிக்கு, பெருமைக்குச் சான்று.

அவர் மாணவர்களுடன் நெருங்கிப் பழகினார். தன்நீண்ட கைகளினால் மாத்திரமன்றி, விரிந்த தன் இதயத்தினாலும் அணைத்து தன்பரந்த நெஞ்சை மாணவர்களுக்கு தஞ்சமாகக் கொடுத்த தன்னிகரில்லாத் தமிழ் வேந்தன். இவர் மாணவர்களுடன் அளவளாவுதை மிகவும் விரும்புவார். மாணவர்கள் கேள்வி கேட்பதை மிகவும் ரசிப்பவர். தன் கொள்கைக்கு எதிர்மாறான கொள்கையுள்ளவர்களையும் மதித்து, அணைத்து மகிழ்பவர்.

மாணவர்கள் விளங்காத ஒன்றைக் கேட்கப்போனால், அவர் மனம் நோகாதவாறு இனிக்க இனிக்கப் பேசி, அவர்கள் மனதில் பதியும்படி அழகாகச் சொல்ல வேண்டும் என்று எண்ணும் அவரிடம், “விளங்கப்

படுத்துங்கள்!" என்று எந்த மாணவரும் கேட்கவில்லையே! என்ற குறை அவருக்கு உண்டு. தெளிவாக, நுட்பமாகக் கல்வி கற்பிக்கும் ஆற்றல் மிக்கவர். எவ்வளவுதான் மிதமாக மனம் விட்டு மாணவர்களுடன் பழகினாலும் - தான் ஆசிரியராக இருந்தும், கல்லூரிக்கு வெளியே மாணவர்களை தன் உற்ற நண்பர்களாக எண்ணி அளவளாவினாலும், அந்த நல்ல மாணவர்கள், அவர் தோள்மீது ஏறவில்லை. மாறாக அன்பு, பக்தி, அடக்கம், பண்பு மிக்கவர்களாக அவருடன் பழகினார்கள். கல்வியை மாத்திரமன்றி கற்றவர்களுக்குரிய நற்பண்புகளையும் மாணவர்கள் மனத்தில் விதைத்த மாசில்லாச் செம்மல், வேந்தன்.

திரு. வேந்தன் அவர்கள் வகுப்பறையில் மட்டும் தமிழ் மொழியின் பாசத்தை மட்டுப்படுத்தியவரல்ல. தான் விடும் ஒவ்வொரு மூச்சும் தமிழின் வளர்ச்சிக்கே என்று வாழ்ந்த அவர், ஆங்கில மொழி உத்தியோக மொழியாக உபயோகிக்கப்பட்டு வருவது, தமிழின் வளர்ச்சிக்கு இடையூறு என்பதைத் திட்டவட்டமாக, இதயபூர்வமாக நம்பிய அவர் - நம்நாட்டு தேசிய மொழிகளான தமிழ் - சிங்களத்தில் உயர்தரக் கல்வி கற்பிக்க முடியாது என்று தான்தோன்றித் தனமாக பேசித் திரிந்தவர்களின் போலி வேசத்தை இழித்து, தமிழ் மொழியில் சகல நடவடிக்கைகளையும் திறம் படச் செய்யமுடியும் என்பதைச் செயலில் காட்டிய சிலருள் பிரதான அங்கம் வகிப்பவர்களில் ஒருவர்.

மற்றைய இலக்கியவாதிகளைப் போல, இவரும் உணர்ச்சி வசப்பட்டவர். மற்றவர்கள் துன்பத்தைக் கண்டு கண்ணீர் சிந்தி, துயரப்படுமளவிற்கு இளகிய நெஞ்சத்தை உடையவர். எதுவித ஆயத்தமுமின்றி, அழகுமிக்க, பொருள் செறிவு நிறைந்த எளிமையான வார்த்தைகளைக் கொண்டு சரமாரியாகக் கவிதை புனையும் ஆற்றலுள்ளவர். அவர் கவிதைகளில் காணப்படாதது - இல்லாதது ஒன்று - அந்நிய மொழி ஆதிக்கம்.

வித்துவான் வேந்தனார் மறைந்து விட்டார். அவர் மூச்சு நின்று விட்டது. அவர் விட்ட மூச்சுக்கள், அவர் விதைத்த வித்துக்கள் முளைவிடத் தொடங்கிவிட்டன. அவர் சிந்திய முத்துக்கள், விலைமதிக்க முடியாத முத்துக்களாக ஒளிவிடுகின்றன. அவர் மறைவினால் ஏற்பட்ட இடைவெளியை யாராலும் பூரணமாக நிரப்ப முடியாது விட்டாலும், அவரின் நல்ல மாணவர்களினால் சிறியதாயினும் நிரப்பப்படும் என்பது என் எண்ணம், அவர் பெயர் தமிழ் மக்கள் மத்தியில் - நன்றியுள்ளம் இருக்கும் வரை நிலவும்.

வாசகர்களே! ஈழத் தமிழ் இலக்கியம் மறக்கமுடியாத இலக்கியவாதியான அமரர் க.வேந்தனார் அவர்களின் பிறந்ததின நூற்றாண்டு எதிர்வரும் 5-11-18ல் வருகின்றது. இந்த நேரத்தில் அமரர் அவர்கள் 73 வருடங்களுக்கு முன்னர் (25-11 1945ல்) யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஈழகேசரி பத்திரிகையில் எழுதி வெளிவந்த இக்கட்டுரையை அவரின் தொலை நோக்கையும் இனிமைமிக்க தமிழின் சொல்நடைச் சிறப்பையும் வாசகர்கள் படித்து இன்புற்றிடவென இங்கு பெருமையுடன் பிரசுரிக்கின்றோம்.

## இனிவரும் உலகில் தமிழன்

**வித்துவான் க. வேந்தனார்**

காலவானிற் புதிய மின்னல்கள் கிளம்புகின்றன, அறிவு நிழலாடுகின்ற வாழ்வில், அன்பும், தொண்டும், வீரமும் அலை பெறுகின்றன. இலக்கிய உலகில் புதுமை எழில் வீசுகின்றது. புலவர் உலகுக்குத்தான் இலக்கியம், அவர்களே அதன் விருந்தாளர்கள் என்னுங் கருத்துகள்

காலவெள்ளத்தில் மூழ்கின்றன. எழுத்தறியாதவன் உள்ளத்திலும் இன்பவெறியை ஊட்டி, அவன் வாழ்வில், புதிய கலைப்பண்பை வளர்ப்பதுதான் இலக்கியம் என்னும் எதிரொலி, எம் உள்ளத்தைத் தொடுகின்றது.

மலையிலிருந்து இறங்குகின்ற அருவி ஊற்றைப்போல, மக்களுள்ளத்தில் புதுமை வீறு, வெறிக்கின்றது. இந்த வெறி இனிவரும் உலகின் ஆக்கப்பாட்டை வரவேற்கின்ற இளமை விருந்தாகும். காலச்செலவில் மக்களின் கொள்கைகள், கலைப்பண்புகள், கடவுள் வழிபாட்டு நெறிகள், நாகரிகச் செப்பங்கள் என்பன மாற்றமடைந்து, வளர்கின்றன. மாற்றமின்றி என்றும் ஒரேநிலையில் நிற்கின்ற எவையும், மக்களின் ஆக்கப்பாட்டிற்கு அரண் தராது. அழிந்தொழியுந் தன்மையன, நிலையன கொள்கைகளையே தமக்குறுதுணையாகக் கொண்டு உலகின் போக்கை எண்ணாது வாழ்கின்ற எம்மக்கட் கூட்டத்தினரும் இனிமேல் வருகின்ற உலகில் இடம்



விழாக்கால
பிரமாண்ட விற்பனை
விழா கால பிரமாண்ட விற்பனையை
முன்னிட்டு யாரும் கண்டிராத மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்றொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647 Fax : 0231 9501648

கம் மாநகரில்...

# ANANTH S STORE

Telefon : 02381 4977491
Telefax : 02381 4977492



அனைத்து விதமான மளிகை பொருட்கள்,
கடலுணவுப் பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள், மிகக் குறைந்த
விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்

கம் பிரதான புகையிர நிலையத்திற்கு
அருகாமையில் (நடைதூரம்)

வாகனம் தரிப்பிடம் வசதிகள் உண்டு

துரித பணமாற்றுச் சேவை

VALUTRANS
MONEY TRANSFER




**Öffnungszeiten :**
**Mo.-Sa. : 09:00Uhr - 21:00 Uhr**
**Heinrich - Reinköster-Strasse 10**
**59065 Hamm, Germany**



28வது ஆண்டில்...

# ORIENT

## Textiles and Jewellery

PRICE DOWN



2018ஆம் ஆண்டிற்கான புத்தம் புதிய
வரவுகளுடன் தொடரும் மலிவு விற்பனை!

28 ஆண்டுகளாக எம்மோடு பயணித்த அனைத்து
வாடிக்கையாள அன்பர்களுக்கும் எமது நன்றிகள்

**Königswall 16 (Am HBF)**
**44137 Dortmund,**
**Germany**

**Tel : 0231 16 23 77,**
**Fax : 0231 14 78 36**

சிறுவர்களுக்கான
ஆடை வகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்

உரிமையாளர் : S. ஜெகதீஸ்

பெறமாட்டார்.

ஒவ்வொரு கொள்கையும், ஓர் குறிப்பிட்ட கால அளவுக்குத்தான் மக்களிடையே நிலைபெறும் உரிமை உடையது. ஒரு கொள்கை குறிப்பிட்ட கால எல்லை கடந்து, ஒரு மக்கட்

கூட்டத்தினரிடையே நிலை பெறுமாயின், அம்மக்கட் கூட்டத்தினர் விரைந்து, உலகின் கண்ணோட்டத்தைக் கடந்து விடுவார்கள். மொழியின் வளர்ச்சியும், காலந்தோறும் வேறுபட்டே செல்கின்றது. அதன் செலவை நாம் தடிந்து ஏவல் கொள்ள முடியாது. அதன் போக்கில் நாமும் கலந்து அதனைச் செப்பஞ் செய்தல் வேண்டும்.

வரன் முறைகடந்து வழிதப்பிச் செல்லும் நிலையை அம்மொழி, எய்தும் நெருக்கடியில் நாம் அதனுடன் தொடர்ந்து புதுமை நெறியில் பழமைப் பண்பைக் கலந்து, வளம்படுத்துவதன் மூலம் அதன் பொலிவின் எழிலைப் பெருக்குதல் வேண்டும். இவ்வாறன்றி, அதன் விரைந்த செலவிற் கலந்து கொள்ளாமல், வெளியில் நின்று புலம்புதல் அறிவுடைமைக்கு அழகாகாது.

பொதுமக்களைப் புறக்கணித்தும், புலவர்களையே தழுவிச் செல்லும் மொழி, தன் வளப்பாடு சிதைந்து, மறைந்தொழியும். இதனால் வரம்பைச் சிதைத்துப் புலவர்களையும் இகழ்வதே மொழி வளர்ச்சியெனச் சிலர் கருதுகின்றனர். அங்ஙனம் இலக்கண வரம்பைச் சிதைத்துப் புலவர்களையும் இகழ்ந்ததினால், ஒருமொழி வளம்பட்ட வரலாற்றை நாம் இன்றளவுங் கேட்கவில்லை. இனிக் கேட்கப்போவதும் இல்லை.

இனிப் பொதுமக்களை அன்பு, அறிவு, தொண்டு, ஆண்மை எனும் பண்புகளில் சிறந்தவர்களாகப் புதுக்கி, உலகை வாழ்விக்கக் கருதாது, ஒரு சிலரின் அறிவு விருந்தாக மட்டும் விளங்கிய ஒரு மொழி, நீண்டகாலம் உலகில் நிலைபெற்றதையும் நாம் அறியோம். எனவே, இனிமேல் வருகின்ற உலகில் தமிழ் மக்கள் இடம்பெற விரும்பினால், அறிவில் மேம்பாடு அடைதல் வேண்டும். அதற்கு மொழியறிவு இன்றியமையாதது.

இன்றைய தமிழ்மொழியின் புத்திளங் கோலம், புலவர்களையும் அவரல்லாத பொதுமக்களையும், ஒரு உண் கலத்தில் பகிர்ந்துண்ணும் புது விருந்தினராக வரவேற்க வேண்டும். அவ்வரவேற்பின் மங்கல முரசின் எதிரொலி கேட்கின்றது. அவ்வொலிதான் தமிழின், 'மறுமலர்ச்சி' இலக்கிய நண்பர் மாநாடாகும்.

அந்த எதிரொலியின் எழுச்சி, தனது உயிர்க்கருவினால், தமிழன்பர் உள்ளத்தில் புதிய கிளர்ச்சியை எழுப்புகின்றது. ஒருவனின் அறிவுக்குறைவே அவன் வதியும் நாட்டின், உரிமை வாழ்வை அழித்துவிடும் என்ற எண்ணம், நிலைபெறுகின்ற இந்த நூற்றாண்டினும், நாங்கள் கலை, கடவுள் வழிபாடு, பொருளாக்கம், தொண்டு, வீரம், காதல், அரசுரிமை எனும் இவைகள் எல்லாம், மக்களுள் ஒரு பகுதியினருக்கே பிறப்புரிமையாக அமைந்து கிடப்பன என்னும் துணிவில் பெரிதும் நிலைகொண்டு நிற்றல், எமது முன்னேற்றத்தைக் கொல்லும் பொல்லாப் பண்பாகும்.

"எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள்" "கல்லாது நிற்பார் இல்லை, கல்வி முற்ற வல்லாரும் இல்லை" எனவரும் பொருள் உரைகளை உணருங்கள். செல்வமும், கல்வியும் மக்களின் பொது உரிமைகளாகும். முயற்சி திருவினை ஆக்கும். புலமை எல்லா உயிர்களுக்கும் இன்பத்தைச் சுரக்கும் அமிழ்த ஊற்று. அந்த அமிழ்தத்தை எல்லோரும் கூடிப் பருகுங்காலம் எம்மை அறை கூவுகின்றது.

இனிவரும் உலகில், தமிழன் முடிசூடப் போகின்றான். தமிழன்னையின் புத்தம் புதிய தமிழன் இன்கனிச் சோலையில் - இளந்தென்றலில் - வெண்ணிலாக் கலைகளில் - நீலவான் திரையில் - கருங்கடல் அலையில் - எல்லாம் நிறைந்து, துளும்பும் இயற்கை எழிலில் தோய்ந்து, தோய்ந்து "இறைகளோடு இணைந்த இன்பம், இன்பத்தோடு இயைந்து வாழ்வு" காண்கின்றான். இதுவே தமிழன் வழிவந்த அடிச் சுவடாகும்.

**தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மானிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது**

தமிழ் வாழ்க! அன்பு பொலிக! தமிழ்நாடு வெல்க. நன்றி. ஈழகேசரி 25-11-1945 ஞாயிறு பதிப்பு

- அவதானி

பகுதி.15

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

விடுதிகளுக்கு வரும் அரசாங்க அதிகாரிகளிடமிருந்தும், அமைச்சர்களிடமிருந்தும் இரகசியங்களை ஒற்றர்கள் அறிந்து கொள்வதற்கு, விடுதிகளிலிருக்கும் முகாமையாளர் முதல் சாதாரண பணியாளர்கள் வரை உதவி செய்வார்கள். இந்த முகாமையாளர்களின் தேவை என்ன? என்பதை அறிந்து கொள்வதில் ஒற்றர்கள் மிகவும் கைதேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

ஒருவருடன் பேசும் போதே அவரவர்களின் தேவை என்னவாகவிருக்கும்? என்பதைக் கண்டுபிடித்து விடுவார்கள். ஏற்கனவே இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்றும், ஆங்காங்கே சில இடங்களில் குறிப்பிட்டது போன்றும் மூன்றே மூன்று விடயங்களை பயன்படுத்தியே உளவு நிறுவனங்கள் மற்றைய நாடுகளின் இரகசியங்களை அறிந்து கொள்கின்றன. பணம், பெண், பொருள் என்பனவாகும்.

இரகசியங்களை அறிந்து கொள்வதில் தனது நாட்டுக்கு அது மிக மிக முக்கியமென்றால் மட்டுமே, உளவு நிறுவனங்கள் பெண்களை பயன்படுத்துவார்கள்.

சர்தேச அதிகாரி தான் ஒற்றர்களுக்கு



கொடுக்கும் இரகசியங்களால், தனது பதவிக்கு ஆபத்து வரலாம், சிறைத்தண்டனை அல்லது மரண தண்டனைகூடக் கிடைக்கலாம் என்பதை அறிந்து கொண்ட போதும், வளமான வாழ்க்கைக்காக தமது சொந்த நாட்டையே காட்டிக் கொடுப்பார்கள்.

சில அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும் இராணுவத்தில் பணியாற்றும் அதிஉயர் அதிகாரிகளிடமும் பெண்களை அனுபவிக்கும் மிதமான ஆசையிருக்கும். வெளிநாட்டுப் பெண்ணுடன் உறவு கொள்ளும் விருப்ப மிகுதியால், அத்தகு பெண்களுக்காக ஆவலுடன் காத்திருப்பார்கள். முக்கிய புள்ளிகளுடன் உறவு கொள்பவளும், மன்மதக்கலையை அக்கு வேறு, ஆணி வேறாக



கரைத்துக் குடித்தவளாகவே இருப்பாள்.

அவளுடைய நோக்கம் இரகசியங்களை அறிந்து கொள்வதேயாகும். பெண்களை ஈடுபடுத்தும் உளவு நிறுவனங்கள் பெண்களுக்கு கோடிக்கணக்கானப் பணத்தை அள்ளிக் கொடுப்பபார்கள்.

பண்பாட்டு ரீதியாக பெண்களை மதிக்கும் நாடுகளில்கூட, உளவு நிறுவனங்கள் தமது நாட்டின் பாதுகாப்பு என்பதற்காகச் சில விதிவிலக்குகளை கொள்ளலாம் என அரசு பெண்களை பயன்படுத்துவதற்கு அனுமதி அளித்திருக்கும்.

சுதேச நாட்டின் சினிமா அழகிகளும், மாடல் அழகிகளும்கூட முக்கிய புள்ளிகளிடமிருந்து இரகசியங்களை அறிவதற்காக, உளவு நிறுவனங்களுக்கு உதவி செய்வார்கள். அதற்காக கோடிக் கணக்கான பணம் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

உலக நாடுகள் எல்லாவற்றிலும் உளவு பார்ப்பதற்கான சாதகமான சூழ்நிலை இருப்பதில்லை. எப்படி இரகசியங்கள் கசிந்தன? என்பதற்கு அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டிய நிலையிலிருப்பதால் பல நாடுகளில் அத்தகைய அதிகாரிகள் மீது தேசத்துரோக குற்ற விசாரணை நடத்தப்பட்டு, சிறைத்தண்டனை, அபராதம் மட்டுமல்ல மரண தண்டனையும் வழங்கப்படுகின்றன.

எனினும் வல்லமை பொருந்திய நாடுகள் வலிமையிழந்த நாடுகளில் மட்டுமல்ல, சம வல்லமையுள்ள நாடுகளின் இரகசியங்களை அறிந்து கொள்வதில் பல நுட்பங்களைக் கையாள்கின்றன.

தமக்குச் சாதகமான அரசினை அமைப்பதில் உளவு நிறுவனங்கள் மூலம் சதியை மேற்கொள்வது, மன்னர்களின் காலத்திலிருந்து இன்றுவரை நடைபெறும் அரசியல் நடவடிக்கையாகும்.

உலக நாடுகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென்பதற்காகவும், பிராந்திய பிரதேசங்கள் தமது ஆளுமைக்குட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், தமக்குச் சாதகமான அரசொன்றினை, தமது சொல்படி நடக்கும் அரச தலைவர்களை ஆட்சிப் பீடத்தில் ஏற்றுவதற்கான சதியினை, வல்லமை பொருந்திய நாடுகள் செய்கின்றன.

பொருளாதார ரீதியான மேம்பாடு தேவையென்பதால், தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு தமக்குச் சாதகமான அரசினை நிறுவுவதற்கு, தமது உளவு நிறுவனங்கள் மூலம் அவற்றை முன்னெடுக்கின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் ஆளுங்கட்சி,



எதிர்க்கட்சி என நாடாளுமன்ற அமைப்பு முறை இருந்து வருகின்றது. கொள்கை ரீதியாக தமக்குள் கொண்டிருக்கும் கோட்பாடுக்காக மைய அரசாளும் அரசுக்கு ஆதரவு, எதிர் என இருபக்க நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் அளித்தாலும், அக்கட்சிகளும் ஏதோ ஒரு விதத்தில் வெளிநாட்டுத் தொடர்பு கொண்டவையாகவே இருக்கும்.

சில நாடுகள் வெளிநாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்வதை தடை செய்து, உள்நாட்டு உற்பத்திகளில் கவனம் செலுத்துகின்றன. வெளிநாட்டு உற்பத்திகளை தடை செய்த அல்லது உள்நாட்டு உற்பத்திகளுக்கு ஊக்கம் கொடுக்கின்ற அரசுகளை, அப்புறப்படுத்த உளவு நிறுவனங்கள் வழியாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

தமது பொருட்களை ஒரு நாடு வாங்குகின்ற சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக பல திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இத் திட்டங்கள் யாவும் நுட்பமான அறிவு கொண்ட இராஜதந்திரிகளால் வகுக்கப்படுகின்றன. வகுக்கப்பட்ட திட்டங்களை தமது உளவு நிறுவனங்களிடம் கையளிப்பார்கள். அதனை அவர்கள் நடைமுறைப்படுத்துவார்கள்.

உள்நாட்டு உற்பத்திக்கு அதிக செலவாகும் என்பதை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வைத்து அறிக்கை சமர்ப்பிக்கும் நிலையை முதலில் ஏற்படுத்துவார்கள். பொறுப்புக்கூறல் அதிகாரியை உளவு நிறுவனங்கள் விலைக்கு வாங்கிவிடும்.

உற்பத்திக்கான மூலப்பொருட்கள் தமது சொந்த நாட்டில் கிடைக்காது, அவற்றை வெளிநாட்டில்தான் வாங்க வேண்டும் என்ற நிலையை தோற்றுவிப்பார்கள்.

வெளிநாடுகளில் அம்மூலப்பொருட்கள் அதிக விலையாகவிருக்கின்ற நிலையை உளவு நிறுவனங்கள் ஏற்படுத்தும். எப்படியெனில்? அந்தந்த திணைக் களங்களில் உளவு நிறுவனங்களால் விலைக்கு வாங்கப்பட்ட தமது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் சுதேச ஒற்றர்களிருப்பார்கள். அவர்கள் மூலப்பொருட்களின் விலை கோருதல், விபரங்களையும் எந்தெந்த நிறவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரியப்படுத்தி விடுவார்கள்.

உளவு நிறுவனங்கள் அந்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, மூலப்பொருட்களின் விலையை அதிகரிக்கவோ? அல்லது மூலப்பொருட்களை குறிப்பிட்ட நாட்டுக்கு விற்பனை செய்வதை நிறுத்தி விடுவார்கள்.

எனவே, தமது நாட்டில் உற்பத்தியாக்குவதைவிட, இறக்குமதி செய்வதே இலாபகரமானது என்ற முடிவுக்கு வரும் அரசு, தமக்குத் தேவையானப் பொருட்களை இறக்குமதி செய்யத் தொடங்கிவிடும். உலகத்தில் பலம் பொருந்திய உளவு நிறுவனங்களை வைத்திருக்கும் நாடுகளாவன அமெரிக்கா, இந்தியா, சீனா, ரஸ்யா, இஸ்ரேல் ஆகியவை முதன்மை வகிக்கின்றன.

அண்மை நாட்களில் இலங்கையில் நடந்த ஆட்சிமாற்ற சதிக் குளறுபடிகளுக்கு காரணமாக இருப்பது இந்திய உளவு நிறுவனமே. இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமென்பதிலும், திட்டமிடலிலும் இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன.

இலங்கையின் தோற்ற வெளிப்பாடு, இலங்கை இந்தியாவின் மாநிலமாக மாறி வருகிறதா? என ஐயப்பட வேண்டியுள்ளது. இலங்கைக் கடைகளில் இந்திய உற்பத்திப் பொருட்களே அதிகம் விற்பனையாகின்றன. விளம்பரப் பலகைகளில் இந்தியப் பொருட்களாகவே இருக்கின்றன. யாழ்ப்பாணம் சென்னையாக மாறிவருவதை காண முடிகிறது. அதே போல இலங்கை எங்கும் சுற்றுலாப் பயணிகளாக சீனர்கள் காணப்படுகின்றனர்.

இவர்களுக்குள் பலர் உளவு நிறுவனங்களால் அனுப்பப்பட்ட ஒற்றர்களாக இருப்பார்கள் என்பதை மறுக்க முடியாது. தானே நிறுவிய அரசு காலப் போக்கில் வேறு திசையில் செல்லும் போது, அவ்வரசை அகற்றிவிட்டு, மீண்டும் அப்புறப் படுத்தப்பட்ட அரசை இந்தியா கொண்டு வந்தமைக்கு பிராந்திய ஆளுமையும், தனது பொருளாதார விஸ்தரிப்புமேயாகும். இந்தியா தனது திட்டத்தை உளவு நிறுவனத்தைக் கொண்டு செயல்படுத்தியுள்ளது.

**[தொடரும்]**


uaets FRANCE
இலங்கைத் தமிழ் பழையமாணவர் ஒன்றியம் - பிரான்ஸ்
வழங்கும்
நாடக உலகில் 40 ஆண்டுகள்!
லண்டன்
தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின்
நாடகவிழா
8.12.2018
சனி மாலை - 4.00 மணி
50, PLACE DE TORCY
75018 PARIS
M°: MARX DORMOY
ஆற்றைக்கடத்தல்
கண்ணாடி வார்ப்புகள்
சர்ச்சை
சம்பந்தம்
நெறியாள்கை :
க. பாலேந்திரா
"கல்விக்குக் கரங்கொடுக்க
கலையால் ஒரு களப்பணி - 2"
பிரவேசம்:
10 €
இந்த நிதி, தாயக மாணவர்க்கானது
கல்விக்கு கரம் கொடுக்க களத்தில் ஒன்றிணைவோம்!
அன்புடன், உணர்வும் உரிமையும் கலந்து அழைப்பது
இலங்கைத் தமிழ் பழையமாணவர் ஒன்றியம்
தொடர்புகளுக்கு : 06 68 81 63 62 / 06 98 58 19 12 / 06 61 77 82 76
http://uaets-france.fr



# ஈழத் தமிழினத்தின் அரசியல் தலைமை பெண்கள் வசம் வர வேண்டும்

**இது அல்லி ராணியும், பவளக் கொடியும் ஆண்ட தேசம். பெண்களே திரண்டு எழுங்கள். நாம் எந்த இனத்தவருக்கும் சளைத்தவர் அல்ல என்பதை உலகறியச் செய்வோம். !**

பாழ் படுத்தும் பழைய தமிழரின் தலைமைகளை அகற்றி விட்டு, தமிழ்ப் பெண்களின் தலைமையில் எமது இனத்தின் அரசியல் போராட்டத்தை தொடர வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாக மாறிவிட்டது. எந்த ஒரு அரசியல் கட்சி சார்பாகவோ, எவருடைய ஒற்றைத் தலைமையிலோ இல்லாத ஒரு கூட்டுத் தலைமையின் கீழ் தமிழினம் தனது தேசியத்தைப் போராடிப் பெற முற்பட வேண்டும்.

1976ல் அத்தகைய ஒரு முயற்சியை, ஈழத் தமிழ் இனம் வட்டுக் கோட்டையில் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகளாக விளங்கிய இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தமிழ் அரசுக் கட்சி, இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர்களிடம் ஒப்படைத்தது. வரலாற்று முக்கியத்துவம் பெற்ற தனித் தமிழ் ஈழப் பிரகடனத்தை அக்கட்சிகளின் தலைவர்களாகிய ஜீ.ஜீ. பொன்னம்பலம், சா. ஜே. வே. செல்வநாயகம், சௌமிய மூர்த்தி தொண்டைமான் இணைந்த தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பு உருவாக்கப் பட்டது.

கொழும்பு திரும்பியதும் திரு.தொண்டைமான் 1977ல் நுவரெலியா, மஸ்கெலியா தொகுதியின் பா.உறுப்பினராக வெற்றி பெற்ற பின்னர் தலைமையில் இருந்து விலகி, சிங்களத் தலைமைகளுடன் இணைந்து அரசியலை மேற்கொண்டார்.

1977ல் நடந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தனிப் பெரும் அமைப்பாக, அறுதிப் பெரும் பான்மையுடன் வெற்றி பெற்று, பாராளு மன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராக அன்றைய கூட்டணியின் தலைவரான அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கம் பதவி ஏற்றார்.

எந்தத் தமிழ் இளைஞர்களின் பெரும் அர்ப்பணிப்பாலும், ஆதரவாலும் எதிர்க் கட்சித் தலைமைப் பதவியை அடைந்தாரோ? அதே இளைஞர்களின் அமைப்புகளில் குழப்பங்களை உருவாக்கவும், சீர் குலைக்கவும் சிங்கள ஆட்சியாளர்களுடன் இணைந்து, பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் பழிவாங்கவும் தலைப் பட்டார்.

AKM

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)
Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

## மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!

## தமிழனின் வரலாற்றில் மாபெரும் புரட்சி

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது






உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!




AKM

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச்சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

“விலை அல்ல எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
தரம் மட்டுமே! நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM




**IMPORTAS CASH & CARRY**

Basler Str. 102, 8048 Zürich- Switzerland

Tel: +41 43 343 03 55 - Fax: +41 43 343 03 56

தமிழ் ஈழம் என்பதை பேசவும் மறுத்தார். வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை அர்ப்பமாகத் தூக்கி எறிந்தார். அதன் காரணமாக அதுவரை தமிழர்களின் அரசியல் போராட்டமாகப் பார்க்கப்பட்ட போராட்டத்தை, பயங்கர வாதமாகப் பார்க்கப்படும் நிலையை ஏற்படுத்திக் கொடுத்தார்.

திரிகோணமலை சம்பூர் தொடக்கம் முதல் பருத்தித்துறை வரை இருந்த கரையோரக் தமிழ்க் கிராமங்களின் மீது, இலங்கைக் கடற்படைப் பீரங்கிப் படகுகள் நடத்திய பீரங்கி மற்றும் எறிகணைத் தாக்குதல்களை அவரும், அவரது கட்சியினரும் இந்தியாவில் இருந்து வேடிக்கை பார்த்ததை, தமிழ் இனம் மறக்க முடியாது. வடமராட்சி விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலும், நெல்லியடி மகா வித்தியாலய இலங்கைப் படை முகாம் மீது மில்லர் நடத்திய தற்கொடைத் தாக்குதலும் இவர்களின் கண்களில் தென்படவே இல்லை.

**இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி தமிழர் பிரதேசங்களில் வானூர்தியில் வட்ட மிட்டவாறே விமானப் படைக்கு எங்கே, எப்போது தாக்குதல் நடத்த வேண்டும்? எனக் கட்டளை இட்டு, தமிழ் மக்களின் வீடுகள், பள்ளிகள், மருத்துவ மனைகள் மீது எறிகணை வீச்சுகளையும், குண்டு வீச்சுகளையும் நடத்தியது. வெடிப்பொருள் நிரம்பிய குண்டுகளை மட்டும் அல்ல, சிங்களவரின் மலங்களை நிரப்பிய பீப்பாய்க் குண்டுகளையும் யாழில் தமிழ் மக்கள் மீது வீசி, அவமதித்த பொழுதும் இந்தத் தானைத் தளபதியின் வீரம் விழித்தெழ மறுத்தது.**

அப்பொழுதும் தமிழ்ப் போராட்டக் குழுக்களை ஊடுருவிக் கைப்பற்ற மட்டும் ஒரு ஆறடி உருவம் தேவைப் பட்டது. அவர் கண்ட கனவில் புலிகளின் அழிப்பு 2009ல் நனவாகியது. ஆனால், அவரால் காப்பாற்றத் தவறிய தலைமையை மட்டும், அவரது ஆறடி இன்று அனுபவிக்கிறது. இந்திய அமைதிப் படை வந்தது தமிழ் மக்களை, வகைத் தொகையற்றுக் கொன்று குவித்தது. அப்போதும் அவர்களின் தூக்கம் கலைய வில்லை.

2009 முதல் சிங்கள இராணுவ அடக்கு முறையினால் ஈழத் தமிழரின் அனைத்து வளங்களும், தாயக தமிழர் நிலங்களும் பறிக்கப் பட்டு, பண்பாட்டு, கலாச்சாரம், மின் ஊடக போகச் சாதனங்களாலும் முழுமையான இன அழிப்பை எதிர் கொண்டுப் போராடி வருகிறது. இவை அனைத்துக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவியாய் இருந்து, அனைத்து வழிகளிலும் துணை போகிறவர்கள் எமது தலைவர்கள் என்பதை, அன்றாடம் வெளிவரும் செய்திகள் உறுதிப் படுத்துகின்றன.

இப்படியான இனத் துரோகிகளை நாம் இனிமேலும் தமிழ் இனம் தலைவர்களாக தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டாடுவது, புத்தி உள்ள செயலாகுமா? இவை அனைத்துக்கும் பொறுப்பான எமது தலைவர்களை நாம் தூக்கி எறியாமல் எதுவித முன்னேற்றமும் காண முடியாது என்பதை, கடந்த கால அனுபவம் உறுதிபடக் காட்டி விட்டது.

**குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சியில் வியக்கப்படும் விதத்தில், சகல துறைகளிலும் பெண்கள் தமது திறமையை நிரூபித்தனர் என்பது உலகம் அறிந்த உண்மைகளே!. ஆனால், போரின் அழிவுகளிலும், போருக்குப் பின்னரான காலங்களிலும் மிகப் பெரும் விலையை தமிழ் ஈழப் பெண்களே கொடுக்க வேண்டிய அவல நிலையே தொடருகிறது. ஆளுமை மிக்க பெண்கள் குலம் ஒன்று, மிக தெளிவான ஆரோக்கியமான முறையில் செயலாற்றி வருவதை நாம் இன்று காண்கிறோம். அவர்களைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயக் காலக் கடமை எம் முன்னே நிற்கிறது.**

2009ல் போர் நிறுத்தப்பட்டு விட்டது என்ற மோசமான பொய்ப் பிரச்சாரம், வருடங்கள் பத்தை எட்டி விட்ட

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

நிலையிலும், அவர்களுக்கான நீதியோ, அடிப்படை நிவாரணங்களும் கூட மறுக்கப்பட்ட நிலையே தொடர்கிறது. காயம் பட்ட குடும்ப உறவுகளுக்கும், பெற்ற பிள்ளைகளுக்கும் ஒரு வேளைக் கஞ்சியைக் கூட கொடுக்க முடியாமல் தவிக்கும் குடும்பத் தலைவிகளான ஆயிரம் ஆயிரம் அபலைப் பெண்களைப் பற்றிக் கவலைப் படவும், துயர் துடைக்கவும் ஒரு சில நல்ல இதயங்களைத் தவிர, யாருமே கிடையாது.

அரசுகளும், தமிழ் அரசியல் கட்சிகளும், தலைவர்களும் பெண்களின் பெயரால் வெளி நாடுகளில் புலம் பெயர் மக்களிடம் பெறும் நிதிகள் கூட, கட்சியின் தேர்தல் பிரச்சாரங்களுக்கும், அரசியல்வாதிகளின் சொந்த செலவுகளிலும் கரைந்து விடும் சோகமே நிலவுகிறது.

90,000 கணவரை இழந்த பெண்களுக்கு வாழ்க்கைக்கான எந்த ஒரு உதவியும், ஏற்பாடும், பாதுகாப்பும் கடந்த 10 வருடங்களாக கொடுக்க வேண்டும் என நினைத்தும் பார்க்காத ஆண்களின் அரசியல் தலைமையால், யாருக்கு என்ன இலாபம்? இன்னுமா அவர்களைத் தமிழினம் தலைமீது வைத்துக் கூத்தாட வேண்டும்?

வடக்கிலும், கிழக்கிலும் பெண்கள், சிறு பெண் குழந்தைகள் மீதான பாலியல் வல்லுறவுகள், கொலைகள் தினமும் அதிகரித்து நிலைமை கட்டுமீறிப் போய் உள்ளது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் பொது மக்களுக்கான பாதுகாப்பும், இயல்பு வாழ்க்கையும் அணுவளவும் இல்லாத அவல வாழ்வே அன்றாடக் கதையாக உள்ளது.

இவற்றை துணிச்சலோடு அரசின் அமைச்சர்கள், அதிகாரிகள் மத்தியில் சுட்டிக் காட்டிப் பேசிய சிறுவர் மகளிர் இணை அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிங்களத்தின் சீற்றம் கண்டு சிறிதும் கலங்காமல், தமது அமைச்சர் பதவியையும் தூக்கி எறிந்து விட்டு, தமிழ் மக்களுக்கு நீதி கேட்டுப் போராடி வருகிறார்.

**அவர் தமிழ் மக்களுக்கான நீதி கேட்டுப் பதவி விலகியதற்காக, பல்வேறு கண்டனங்கள், பயமுறுத்தல்கள், விசாரணைகளையும், நீதிமன்ற வழக்கையும் எதிர் நோக்கி உள்ள வேளையிலும், எந்த ஒரு**



**தமிழ் அரசியல் கட்சியோ, நபரோ அவருக்காக ஆதரவுக் குரல் கூட எழுப்பாத, பச்சோந்திகள்தான் தமிழினத்தின் தலைவர்களாக இருக்கும் வெட்கக் கேடான நிலையில் நம் இனம் இருக்கிறது.**

இவர்களை நாம் இனிமேலும் நம்பிப் பயனில்லை. முதல் வேலையாக இவர்கள் தூக்கி, வரலாற்றுக் குப்பையில் எறியப்பட வேண்டும். நமக்கு ஒரு புதிய தலைமை வேண்டும். துணிச்சலோடு மக்கள் பிரச்சினைகளுக்காகப் போராடி வரும் விஜயகலா. மகேஸ்வரன், அனந்தி சசிதரன் மற்றும் பல பெண்கள் சமூக அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள் இருக்கும் பொழுது, தமிழினத்தின் தலைமையை பெண்களிடமே ஒப்படைப்பது ஒன்றுதான் சிறந்த முடிவாக இருக்க முடியும்.

**எம் இடையே உள்ள அரசியல் சட்ட விதிகள் பற்றிய அறிவும், மதி நுட்பமும் கொண்ட சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து, மக்கள் விடுதலை இயக்கம் என்ற புதுப் பெயரில் மக்களுக்கான அரசியலை செய்ய முன்வர வேண்டும்.**

**இந்த அமைப்பு வெளிப்படையாக எந்த அரசியல் திட்டத்தையோ, தமிழ் தேசியம் என்றோ பேசித் தன்னை**



# Jaffna Stores

Geschäftsführer : Herr Thayaharan Nadarajah

## மாபெரும் மலிவு விற்பனை

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்







**மண்மணம் மாறாத சுவைதரும்**
**தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

மொத்தமாகவும், சில்லறையாகவும் NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆபிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறிவகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

www.jaffnastores.com
info@jaffnastores.com



**அரசியலுக்குள் வரையறை செய்யாமல், தமிழ் மக்களின் தேவைகளையும், அரசியல் தீர்வு பற்றியுமே பேச வேண்டும். அப்படிக் காட்டிக் கொள்வதால் இந்த அமைப்பை இன, மத, மொழி பயங்கரவாதம் போன்ற அடையாள முத்திரைகளைக் குத்தி, எதிரிகள் பிரச்சாரம் செய்ய இடம் கொடுக்காமல் அமைப்பை பாதுகாக்க முடியும்.**

**அதன் செயல் திட்டம் முற்றிலுமாக ஈழத் தமிழரின் அனைத்து அரசியல் வேலைத் திட்டங்களையும் வடிவமைத்துச் செயற் படுத்தும் விதமாக இருக்க வேண்டும். எமது அரசியல் இலக்கு ஒன்றிணைந்த இலங்கைக்குள் கட்டுப்படுத்த முடியாத சர்வ தேசச் சட்டங்களுக்கு இசைவான மக்களாட்சி அலகாக தமிழ் மக்களின் இறையாண்மையை உறுதிப்படுத்தும் நிலையான உறுதியான அரசைப் பெறப் போராட வேண்டும்.**

இதன் பொருட்டு சிங்கள இலங்கையின் பாராளுமன்ற அரசியலுக்குள் சிக்கி விடாத படிக்கு,பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் முன்னதாகவே திகதி இடப்படாத இராஜினாமாக் கடிதங்களைப் பெற்ற பின்னரே, அவர்களை தேரல்தலில் நிறுத்தி வெற்றி பெறச் செய்துஇதுரோக அரசியல்வாதிகளை முற்றாக தோற்கடித்து விட வேண்டும்.

எந்த நிலையிலும் வெற்றி பெறும் வேட்பாளர்கள் ஸ்ரீலங்காவின் அரசமைப்புச் சட்டத்துக்கு விசுவாசப் பிரமாணம் செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழ் மக்களின் இறுதி அரசியல் இலக்கை அடையும் வரை,எமது பாராளுமன்ற அரசியல் இப்படி இருப்பதே எம் மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும்.

**இறுதி அரசியல் விடுதலையைப் பெறும் வரை வேட்பாளர்களிடம் இருந்து ஏற்கனவே திகதி இடப்படாது பெற்றுக் கொண்ட இராஜினாமாக் கடிதங்களை அமைப்பின் செயற் குழு பயன்படுத்தி அடுத்து வரும் தேர்தல்களிலும் இதே வழியைப் பின்பற்றி களை வேட்பாளர்களை நிறுத்தி வெற்றி பெற வைத்துத் தொடர்ச்சியாக பாராளுமன்ற அரசியலைப் புறக்கணிக்க வேண்டும்.**

இத்தேர்தல்களில் பெண் வேட்பாளர்களை அதிக அளவில் நிறுத்துவதால், மிகப் பெரும் நன்மைகளை உலக அளவிலும், தமிழ் பெண்களின் உண்மை நிலை பற்றிய கவனத்தை பெற முடியும். தமிழரின் அரசியல் போராட்டம் பெண்களால் வழி நடத்தப்படும் பொழுது, ஈழத் தமிழரின் அரசியல் உரிமைப் போராட்டம் உலக அனுதாபத்தையும், ஆதரவையும் இலகுவில் பெற முடியும்.

**எதற்காகப் பெண்களை முன்னிறுத்தி எமது அரசியல் தலைமை இருக்க வேண்டும் என்றால்? உலகின் முதல் பெண் பிரதமராக சிங்களம் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவை நிறுத்தியது. அதுவே பின்னர் உலக நடைமுறையாகப் பல நாடுகளிலும் பின்பற்றப்பட்டு, வெற்றிகரமாகச் செயலாக்கம் கண்டது.**

**அவரது ஆட்சிக் காலத்திலும், பின்னர் அவரது மகள் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலும் சிங்களத்தின் தமிழின அழிப்பு அரசியல் முளைத்து, வேரூன்றி பெருவிருட்சமாக உலக அரங்கில் எந்தவித எதிர்ப்பும் இன்றி, தமிழ் இன அழிப்பு மனித உரிமை மற்றும் போர்க் குற்றங்களை வெற்றிகரமாகச் செய்து முடித்தது.**

பண்டார நாயக்கா டட்லி ஜே.ஆர். போன்றவர்களால் செய்ய முடியா திருந்த தனிச் சிங்கள அமுலாக்கம், வடக்கு கிழக்கில் இராணுவத்தை நிறுத்தி, தமிழரின் அரசியல் போராட்டங்களைச் சீர்குலைத்தது. மலையகத் தமிழரை இந்தியாவுக்கு நாடு கடத்தியது. இந்தியாவின் வசம் இருந்த கச்சத் தீவை பெற்றுக் கொண்டது. சர்வ தேச நிறுவனங்களை அரசுடமை ஆக்கியது







Sagana
JEWELLERY
மாதம் தோறும்
150 பிறாங் செலுத்தி
அதிர்ஷ்ட முறையில்
நகைகளைப் பெற்றுக்
கொள்ளலாம்
உங்கள் பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளை மாற்றிக் கொள்ள...
உங்கள் உடைந்த நகைகளை
உடன் திருத்திக் கொள்ள....
புதிய டிசைன்களில் அனைத்து கவறிங்
நகைகளை பெற்றுக் கொள்ள...
மாதம் தோறும் 150 பிறாங் செலுத்தி
அதிர்ஷ்ட முறையில் நகைகளைப் பெற்றுக் கொள்ள....
இலங்கை இந்திய நாடுகளுக்கான துரித பணமாற்று சேவை...
தாலிக்குப் பொன்னுருக்குதல்,
காது, மூக்குக் குத்துதல் போன்ற
நல்ல காரியங்கள் செய்து கொடுக்கப்படும்.
Zelgstr.1, 3027 Bern - Bethlehem
Tel : 031 534 80 99 Mob. : 079 6069063
email : v.perinparajah@gmx.ch web : www.saganajewellery.com




BCN TRAVELS
Consulting Network
Travels Busines Worldwide
விமானச் சீட்டுக்கள் சிறப்பு விலையில்... எம்மிடம்
Rheinischestr.72
44137 Dortmund
Tel : 0231 / 10876361
Last Minute
Tickets avaliable
on Sunday and
Holidays
Öffnungszeiten : Mo-Sa 09 : 00-20:00 Uhr
துரித பணமாற்றுச் சேவை
VALUTRANS
MONEY TRANSFER
TEMPO
MONEY TRANSFER
BALU ASIAA
Money Transfer
Ria
Worldwide Money Transfer

போன்ற ஆண்களால் செய்ய முடியாத அத்தனையும் ஸ்ரீமாவோ சாதித்துக் காட்டினார்.



அவரது மகள் சந்திரிகா கிருஸ்தவ தேவாலயங்கள், வைத்திய சாலைகள், மக்கள் குடியிருப்புகள் உட்பட பாட சாலைகள், இந்துக் கோயில்கள் எனக் கண்ட படிக்கு விமானக் குண்டுகள் வீசி, யாழ்ப்பாண மக்கள் 5 இலட்சம் பேரை ஒரே இரவில் கொட்டும் மழையில் 40 மைல்கள் நடக்க வைத்தே விரட்டி அடித்தார்.

**செம்மணி மற்றும் கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள் உட்பட பல்லாயிரக் கணக்கான தமிழ் உயிர்களைக் கொன்று குவித்தார். இத்தனை குற்றங்களைச் சிங்களம் செய்த போதிலும் நாட்டின் தலைமையை பெண்கள் வகித்த காரணத்தால், உலக அரசுகள் கண்டிக்கவோ, கண்டு கொள்ளவோ இல்லை என்பதை நாம் புறக்கணிக்க முடியாது.**

அவர்கள் இருவரும் தமிழின அழிப்பைச் செய்த பின்னரும்,உலக அரங்கில் புனிதர்களாக வரவேற்கப் படுகிறார்கள். எங்கள் மத்தியில் போராடும் திறனும், உள உரனும் படைத்த பெண்களுக்கு பஞ்சமே இல்லை என்ற நிலையை மேதகு தலைவர் வே. பிரபாகரன் உருவாக்கி விட்டுச் சென்றுள்ளார். அத்தகைய சிறந்த வீரம் நிறைந்த நாற்றங்காலை எம் இனம் நசிந்து போய் விடாத படிக்கு எமது செயற்பாடுகள் சிறப்புற வேண்டும்.

வடமாகாண சபை முதலமைச்சர் திரு.விக்கினேஸ்வரன் தமிழ் சிங்கள அரசியல்வாதிகளின் மிகக் கடுமையான விமர்சனங்கள், கண்டனங்களுக்கும் உள்ளாக்கப் பட்டுள்ள நிலையில், அவரது முதுமையும், உடல் வலுவும் கருதி அவரது கரங்களை நாம் பலப்படுத்த வேண்டும். மேலும் துடிப்பாக இயங்குவதற்கு எங்களிடையே உள்ள துடிப்பும், திறமையும், மன வலுவும் படைத்த பெண்களை பயன்படுத்துவது காலத்தின் கட்டாயமாகத் தெரிகிறது.

**70 வருடங்களாகக் ஆண்களின் தலைமையால் எம் இனம் கெட்டு அழிந்தது போதும். இனிமேலாவது பெண்களின் தலைமை உருவாகட்டும். இது அல்லி ராணியும், பவளக் கொடியும் ஆண்ட தேசம். பெண்களே திரண்டு எழுங்கள். நாம் எந்த இனத்தவருக்கும் சளைத்தவர் அல்ல என்பதை உலகறியச் செய்வோம்.**


THOOYA COMMUNICATION




Lyca TV

BOX எம்மிடம் கிடைக்கும்

Rheinische Str 80
44137 Dortmund

# AMMA's food



வெள்ளிக்கிழமை அறுசுவையுடன்
மரக்கறிச் சாப்பாடு சனிக்கிழமை ஸ்பெஷல் பிரியாணி
மற்றும் பாலப்பம் உட்பட
இன்னும் பற்பல சுவையான உணவுகளுடன்.......

அமைதியாகவும் ஆனந்தமாகவும் பிரியாணி,
கொத்துறொட்டி பிட்டுக் கொத்து, இடியப்பக்கொத்து,
தோசை, இட்லி மசாலாத்தோசை, மற்றும் பாலப்பம்
போன்ற உணவுகளுடன் நீங்கள் விரும்பிய
வகையிலும் உணவுகளை உண்டு மகிழ்ந்திட......

**Öffnungszeiten**
Mo. - Do. 11:30 -22:30
Di. - Geschlossen
Fr. und Sa. 11:30 - 23:00
So. und Feiertag. 15:00 -22:30



## அம்மாவின் சுவையுடன்

## அம்மா'ஸ் உணவகம்




http://www.ammas-food.de
https://www.facebook.com/AmmasFood

**Rheinische Str -80A , 44137 Dortmund , Tel.- 0231 33 898 691**

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்



# கனவுகளைக் காத்திடுவோம் கல்லறை வாரீர்...!

தேமதுரத் தமிழோசை
உலகமெல்லாம்
பரவும் வரை செய்தல் வேண்டும்
சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ் முழக்கம்
செழிக்கச் செய்வீர் என்று
அன்று தமிழ் விடுதலைக்கு
வித்திட்டான் பாரதி
அதன் வழித்தோன்றலாய்
வந்தவர்கள் நம் மாவீரர்கள்

மறைத் தமிழன் மாண்புடன் வாழ
விடுதலைக்கு வித்தான
முத்துக்கள் எத்தனை
கரிகாலன் காலத்தில்
பொன் சிவகுமார் ஏற்றிவைத்த
விடுதலைத் தீயில்
அஞ்சா நெஞ்சுடன்
உடலை உருக்கியவன்
தியாக தீபம் திலீபன்
உணவை மறுத்து
தன் உயிரை
தாய் மண்ணுக்கு
உரமாக்கினான்

வாளையடி வாளையாக
தமிழினம் மானத்துடன் வாழ
கனவுகளைத் தொலைத்த
இலட்சிய வீரர்களை
உயிர் உள்ளவரை
உள்ளத்தில் சுமப்போம்
காலத்தால் அழியாத
காவியங்களையும்
அவர்களின் கனவுகளையும்
கடல் கடந்தாலும்
கண்ணுக்குள் வைத்துக்
காத்திடுவோம் வாறீர்



ஈழத் தாயின்
இதய முத்துக்கள்
இன்பமாய் நாம் வாழ
ஈகைச் சுடராகி
இளமையைத் தொலைத்த
இலட்சியத்தின் வேங்கைகள்
கயவனின் பகைமுடித்து
களத்தை வென்ற
காவல் தெய்வங்களை கண்டு
அவர்கள் கனவுகளைச்
சுமப்போம் - மாவீரர்
கல்லறை வாறீர்.....!!

**ஜீவிதா,**
**ஜேர்மனி**



அகர கவிக்களம்....

“உளம் திறக்கும் உண்மைகள்....” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

# விதைகள்

கனவுகளைப் புதைத்துவைத்த
கல்லறைகளை இனி
காண்பது எளிதல்ல.

சாதாரண மனிதரும் கைதொழும்
சந்நிதானங்களாக அவை
அப்போதெல்லாம் காட்சி தந்தவை.

கோயில்களுக்கும்,
குடமுழுக்கிற்கும் கூட
கூட்டமாய் மக்கள் திரண்டதில்லை,
கார்த்திகை மாதத்தில் வரும் - அந்தக்
கண்ணீர் நாளைப் போல,

என்ன செய்வது..?
புதைத்த கனவுகளை மீண்டுமொருமுறை
புதைத்து விட்டிருக்கிறார்கள்
புத்தனின் அரக்கர்கள்.
அதனால்;
கண்ணீர் மழை கூட - தன்னை
கட்டுக்குள் வைத்திருக்கிறது.

அவர்கள் இல்லாத மண்ணில்
அழுகை என்பதும் வீணே,
அநாதைக் குழைந்தைகளின்
அழுகைக்கான பதில்
எப்போது கிடைக்குமென்று
எவரும் அறிவதில்லை.

ஆனால்;
அந்த நாளில் வானம் அழும்.
அந்த அழுகையில்
வெறித்தனம் மிகுந்திருக்கும்.
மழைத்துளிகளின் கனத்தில்
பூக்கள் சிதறிவிழக்கூடும்.

வேர்களை மூடியிருக்கும் மண்கூட
விலகிக் கரையுமளவிற்கு
மழைத்துளி மோதும்,
அதைச் சாதாரண மழையென்று
அலட்சியப்படுத்தி விட முடியாது.

ஒரு விதை
அளவுக்கு மீறிய ஆழத்தில்
அமிழ்ந்து புதைந்திருப்பின்
அது மேலெழும் வரை
மழை மூர்க்கமாய்ப் பெய்யும்.

வரலாற்றை எழுதிய
விதைகள் அவையென்று
வந்து விழும் மழைத்துளி அறியும்.
மழை என்பது
இயற்கை தாய்
பூமிக்கெழுதும் மடல்.
காலத்திற்கேற்றவாறு மழையின்
கனதி வேறுபடும்.

தெறித்து விழும் மழையின்
தீராத வருடலில்
வெளித்தெரியும் விதைகளை
வீசும் காற்று முளைக்கச் செய்யும்.
பூமி அவற்றைத் தாலாட்டும்.

ஏற்றப்படும் தீபங்களில்
எரியும் நெருப்பானது
எப்போதாவது அணையக்கூடும்.
ஆனால்;
அமைதியாய் உறங்கும்
அந்த விதைகளுக்குள்
அக்கினிக் குஞ்சுகள்
அடைகாக்கப் படுகின்றன.

-தேவன்





அகதித் தமிழன் கதிர்

# புலம்பெயர் அமைப்புகளை இயக்கும் புலனாய்வுத்துறை!!

**சென்ற மாத தொடர்ச்சி...**

விடுவிக்கப்பட்ட போராளிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழீழ மக்களின் மனங்களில் ஒட்டிவிடக் கூடாது என்பதற்காக, ஊடக மட்டத்தில் பெரும் வதந்திகளை கிழப்பி விட்டது சிறிலங்கா புலனாய்வுத்துறை. சரணடைந்து விடுவிக்கப்பட்டவர்களை இரண்டகர்களாக்கி (துரோகிகளாக்கி) முடக்கும் திட்டம் முன்னெடுக்கப் பட்டது.

சரணடைந்த போராளிகளைச் சமூகத்தில் ஓரங்கட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஆளணி ரீதியில் முழுமையாக பங்கெடுத்திருந்த வன்னி மற்றும் பெரியளவு போராட்டப் பங்களிப்பு விகிதத்தைக் கொடுத்த தென் தமிழீழப் பகுதிகளில் சரணடைந்த போராளிகளைச் சமூகத்தில் ஓரம் கட்டும் நடவடிக்கை தோல்வியடைந்தது. காரணம், வன்னி மற்றும் தென்தமிழீழப் பகுதிகளில் மிகப்பெருமளவிலான குடும்பங்கள் நேரடியாக போராட்டத்தில் பங்களிப்புச் செய்திருந்தன.

அவர்களும் போராளிகளாக வாழ்ந்திருக்கிறார்கள். மாவீரர்களின் ஈகங்களையும், அவர்கள் சிந்திய குருதியையும் கண்கூடக் கண்டிருக்கிறார்கள். அதனால் சிங்களத்தின் “இரண்டகர் (துரோகி)” ஆக்கும் திட்டம் வன்னி மற்றும் தென் தமிழீழப் பகுதிகளில் எடுபடவில்லை.

சமூகத்தால் ஐயுறவோடு பார்க்கப்படுவதை உளவியல் ரீதியாக தாங்கிக் கொள்ள முடியாத பல பிறமாவட்ட போராளிகள், கூடதங்கள் குடும்பங்களை மீண்டும் பிரிந்து, வன்னியில் நிரந்தரமாக குடியேறியிருக்கிறார்கள். சிறிலங்கா மற்றும் இந்திய அரசுகள் விடுவிக்கப்பட்ட போராளிகளை “இரண்டகர்கள் (துரோகிகள்)” என ஓரம் கட்டும் வேலையை சில ஊடகங்களினூடாக செய்ய முயற்சி செய்து வன்னி மற்றும் தென்தமிழீழப் பகுதிகளில் எடுபடாமல் போக, அந்த வேலையை புலம்பெயர் அமைப்புகள் மற்றும் அரசியல்வாதிகளினூடாக முயற்சி செய்து குறிப்பிட்ட அளவு வெற்றி கண்டிருக்கிறது.

இன்று அரசியல் காளான்களாக முளைத்திருக்கும் சிலர் அடிக்கடி “இரண்டகர் (துரோகி)” என்ற சொல்லை பயன்படுத்துகிறார்கள். உண்மையில் “இரண்டகர் (துரோகி)” என்பதன் பொருள் சரியாகத் தெரிய வேண்டும். விடுதலைப் புலிகள் “தேசத் துரோகி”களுக்கு தண்டனை வழங்கினார்கள். முதலில் விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட


சூரிச் மாநகரில்
அபிரா
டெக்ஸ்டைல்
BEST PRICE
திருமணப் பட்டுப்புடவைகள்,
பட்டு வேஷ்டிகள் மற்றும் புதிய பஞ்சாபி வகைகள்,
சோளி ஹிட் வகைகள், சீகுயின்ஸ் சாறிகள், புதிய வகையான
சாறிகள் மற்றும் சிறுவர்களுக்கான கோட், சூட், சேட்,
சர்வாணி வகைகள் அனைத்தும் நீங்கள் இதுவரையில்
எங்கும் பெற்றிருக்காத வகையில்
மிகுந்த மலிவு விலையில்
கொள்வனவு செய்யலாம்
CONTACT
Stauffacher Str.149
8004 Zürich
Tel : 043 233 54 54

IM
Milin Impex GmbH
Westendorfstr.41, 44287 Dortmund
குறைந்த விலையில் நிறைந்த உணவுப் பொருட்கள்
எமது மலிவு விலைகளை அறிந்து கொள்ள....
www.milinimpex.de
BEST PRICE
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
10:00 முதல் 18:00 மணி வரை திறந்திருக்கும்
Tel : 0231 459614/28 Fax : 0231 1515288 info@milinimpex.de

தண்டனைகளுக்கான குற்றங்கள் என்ன? என்பதையும், விடுதலைப் புலிகள் “தேசத்துரோகம்” என்று வரையறை செய்தது எது? என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழீழ மக்கள் தமது உயிரை ஈகம் செய்து “தமிழீழ” விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் போது, “தமிழீழ விடுதலையை தடுக்கும் நோக்கில்” இராணுவ மற்றும் அரசியல் ரீதியில் “தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பகைவர்க்குக் காட்டிக் கொடுத்தல்” அல்லது “தமிழீழ விடுதலையின் சாத்தியப் பாட்டை இல்லாது செய்யும் நோக்கில் பகையின் கூலி ஆளாக செயற்படல்” இரண்டகமாகக் கருதப்பட்டது.

அதாவது தமிழீழ விடுதலைக்கு எதிராகச் செயற்படுவதுதான் தேசத்துரோகத்தின் அடிப்படை மூலக்கூறு. ஆனால், இன்று “தமிழீழம் கேட்காத” கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் அரசியலை விமர்சிப்பவர்களும், “தமிழீழம் கேட்காத” விக்கினேசுவரனின் அரசியலை விமர்சிப்பவர்களும், மிகச்சாதாரணமாக “இரண்டகர்கள்” (துரோகிகள்) என்று வரையறை செய்து, அதைப் பரப்பும்படி ஈழத்தில் இருக்கக்கூடிய இளைஞர்களை தூண்டி விடுவதும் தூண்டப்பட்டவர்களுக்காக பொருண்மிய ரீதியிலான கவனிப்புகளையும், அவர்களுக்கான ஊடக ஆதரவு தளத்தையும் திறந்து விடுபவர்கள் புலம்பெயர் அமைப்புக்களே.

“குடும்பப் பிரச்சினையால்தான் போராளிகள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தார்கள்” என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஐ.நாவில் வைத்து தெரிவித்ததற்கு “விளக்க உரையை” யாழ் ஊடக மையத்தில் செய்த செல்வராசா கசேந்திரன் அரசியலில் ஈடுபடும் முன்னாள் போராளிகளைக் கடுமையாகச் சாடியிருந்தார்.

கஜேந்திரகுமாரை நியாயப்படுத்துவதற்காக மிக மோசமாக விளக்க உரையை செல்வராசா கஜேந்திரன் வழங்கியிருந்தாலும், இடையில் அவர் சொன்ன “உண்மையில் அவர்கள் புனர் வாழ்வளிக்கப் பட்டவர்களோ தெரியாது” என்ற சொற் பயன்பாடு ஆழமாக நோக்கப்பட வேண்டியது.

சிங்களத்தின் சிறையில் அல்லது முகாம்களில் இருந்து வந்த போராளிகள், ஐயுறவுடன் பார்க்கப்பட வேண்டியவர்கள் என்ற பொருட்பட அல்லது சிங்களத்தின் முகாம்களில் இருந்து வந்தவர்கள் முடங்கிக் கிடக்கப்பட வேண்டியவர்களே தவிர, தமிழ் மக்களுக்கான அரசியல் செய்யக்கூடாது என்ற பொருளில் சொல்லப் பட்டிருப்பதானது இதற்கு பின்னால் யார் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்? என்ற ஐயுறவை உறுதிப்படுத்துவதாகவே அமைகிறது. (காலம் வழி சமைத்தால் செல்வராசா கசேந்திரன் மற்றும் கசேந்திர குமாரை மக்கள் முன்னிலையில் இருத்தி 2009 காலப் பகுதிகளில் நடைபெற்ற “துரோக” நிகழ்வுகள் குறித்து சில கேள்விகளை தமிழ்த் தேசியம் நிச்சயம் கேட்கும், அத்துடன் அவர்களின் முகத்திரையை கிழித்துக் காட்டும்.)

● முற்றும்


AFRO, ASIA SPICES MARKT

Bushhausener Str 63, 46049 Oberhausen

எமதன்பு தமிழ் மக்களுக்காக
Oberhausen நகரில் ஒரு புது வரவு....

தொலைபேசி : 0208 82889175,
015214642896, 017680063804




உங்கள் இல்லத்தரசிக்கு
அவசியமான மளிகை பொருட்களும்,
மரக்கறிகள் மற்றும் அனைத்து
மீன் வகைகளும், இலங்கை இந்திய
எல்லா வகையான உணவுப்
பொருட்கள் மற்றும் பாகிஸ்தான்,
ஆபிரிக்கா, சீன உணவுப் பொருட்களும்
எம்மிடம் தரமாகவும், நியாய விலையிலும்
பெற்றுக் கொள்ளலாம்

Halal Products
HALAL

Money Transfer
Ria MONEY TRANSFER
ACE money transfer
Aftab Currency
chitramTV

# Swiss Life
## Select



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே... அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

**சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!**

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்
















**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch

# என்ன கொடுமை சரவணா!...

கல்லெறி வேலுப்பிள்ளை



**வணக்கம் பாருங்கோ ! எப்பிடி இருக்கிறியள்..? நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. விழுங்குறதும் நடக்குறதும், தூங்குறதுமா போகுது வாழ்க்கை. விழுங்குறது எண்டா சாப்பிடுறதைத் தான் சொன்னனான் பாருங்கோ. கண்டது நிண்டது எல்லாத்தையும் விழுங்கிபோட்டு அவதிப்படுற வாழ்க்கை பொல்லாத வாழ்க்கை பாருங்கோ. இப்ப உள்ள துரித உணவுகள் தொடங்கி, எங்கட வீட்டுச் சமையல் வரைக்கும் இரசாயனம் கலக்காத உணவு எண்டுறது மிக மிகக் குறைவு பாருங்கோ. சுவைக்காகச் சேர்க்கிற எங்கட இயற்கைப் பொருட்களான மூலிகைப் பொருட்களை சேர்க்கிறது உடல்நலத்திற்கு மிகவும் நல்லது பாருங்கோ. ஆனாலும் சில விசயங்களை தவிர்க்கவும் முடியாது.**

இஞ்ச வெளிநாட்டில பாருங்கோ, சமையற்கலையைத் தொழிலாச் செய்யுற ஆக்கள் பலர் இருக்கினம் பாருங்கோ. தங்கட வாடிக்கையாளர்களோட அன்பாப் பழகி, அவைக்கு ஏற்ற மாதிரி சேவை செய்யுறது ஒரு கலை. அப்பிடிச் செய்யுற ஆக்கள் யாரையும் வற்புறுத்தியோ, அல்லது வெருட்டியோ தங்கட சமையலைத் தான் நீங்கள் வாங்கவேணும் எண்டு யாருக்கும் கட்டளை போடுறதில்லை. மக்களுக்குப் பிடிச்சிருந்தால் மக்களாகவே தேடிப் போவினமே தவிர யாரையும் கட்டாயப்படுத்தி இழுக்கிறது படுகேவலமான வேலை பாருங்கோ. உப்பிடி யாரும் செய்வினமோ எண்டு நீங்கள் கேட்கிறது புரியுது பாருங்கோ. ஆனால் அப்பிடியும் சில நேற்று முளைத்த சமையற் காளான்கள் இருக்கினம் எண்டுறது உங்களுக்குத் தெரியவர வாய்ப்பில்லை பாருங்கோ.

விசயம் என்னெண்டா பாருங்கோ இப்பவெல்லாம் எதை எடுத்தாலும் “நாங்கள் இதன்மூலம் ஊரிலுள்ள போராளிகளுக்கு உதவி செய்கிறோம்” எண்டுறதுதான் கடிதத் தலைப்பு பாருங்கோ. இனி கொஞ்ச நாளில சிலரின்ர சொந்த நிகழ்வு அழைப்பிதழ்களில கூட உந்த வாசகம் தான் வரும் கண்டியளோ. ஐயோ தம்பிரானே, தலைவர் ஒரு நாள் கூட நாட்டுக்காக போராட வந்த போராளிகளை வைத்து பிழைப்பு நடத்தியதில்லை எண்டுறது வரலாறு பாருங்கோ. ஆனால் இஞ்ச உள்ளவங்கள் சமைச்சாலும் போராளிகளுக்காகத் தான், கோயிலிலே கடை போட்டாலும் போராளிகளுக்காகத்தான், மாவீரர் நாளில சேருற காசும் போராளிகளுக்காகத் தான், கலைநிகழ்ச்சியும் போராளிகளுக்காகத் தான், எண்டு எல்லாமே போராளிகளுக்காக எண்டால், அங்க இருந்து நோய் தீர்க்க வழியில்லாமல் சாகிறவன் எல்லாம் யார்? எனக்கெண்டா விளங்கேல்லை பாருங்கோ.

சரி விசயத்துக்கு வருவம் கண்டியளோ. இஞ்ச தலைநகரில இருந்தபடி நான் தான் இஞ்ச இயக்கத்தைக் கட்டி வளர்த்தது எண்டு, எங்கட தத்துவ மேதை பாலா அண்ணை இஞ்ச வந்திருந்த நேரம் அவரிட்ட அதைச் சொல்லி, பாலா அண்ணையின்ர வாயால ஆலாபனை வாங்கிக்கட்டிய ஒருத்தரும், அங்கின குடிச்சுக் கும்மாளமடிச்சுக் கொண்டு திரிஞ்சுபோட்டு, இப்ப நான் இல்லாமல் விடுதலை இல்லை எண்டு முழக்கமிட்டு படம் காட்டுற ஒருத்தருமாச் சேர்ந்து, இப்ப நாட்டில உள்ள போராளிகளுக்காக சமையற்கலையைக் கையில எடுத்திருக்கினம் கண்டியளோ. அவை சமையற் கலையை கையில எடுத்ததில இருந்து, அங்க குடும்ப நிகழ்வுகளில கூட பலர் சாப்பிடாமல் எழும்பிப்போன நிகழ்வுகள் ஏராளமா நடக்குதாம் கண்டியளோ.

விசயம் என்னெண்டா பாருங்கோ, தலைவரின்ர படத்தை முகமறைப்புக்காக வைச்சுக்கொண்டு ஏராளமான அட்டாதுட்டி பண்ணுறவன் தான் இப்ப அதிகம் கண்டியளோ. இன்னமும் அந்தாளின்ர பேருக்கு சூனியம் வைக்கிறதெண்டே திரியிற உந்த அரைகுறைகளால ஒரு நாளும் எங்களுக்கு விடிவு வரப்போறதில்லை பாருங்கோ. படிக்கிற பிள்ளையளை இரண்டாப் பிரிக்கிறது. நிகழ்வுகளை இரண்டா பிரிக்கிறது, தங்களுக்குத் தாளம் போடாதவன் ஒரு நிகழ்வைச் செய்தால் அவனை துரோகி எண்டு முத்திரை குத்துறது எண்டு உவையள் பண்ணுற அலப்பறை வழமையானது தான். ஆனால் இப்ப வேற ஒரு வேலையும் புதுசாத் தொடங்கீட்டினமல்லோ.

அதுதான் சமையலைச் சொன்னனான் பாருங்கோ. இப்ப என்னடா வெண்டால் யாராவது தங்கட குடும்ப நிகழ்வுக்கு உவையிட்ட சாப்பாடு எடுக்கேல்லை எண்டால் அவனும் துரோகியாம் பாருங்கோ. அடேய் பன்னிக்கூட்டமே, சோறு கறியில எங்கேயடா துரோகம் இருக்கு? தங்கட பிழைப்பில மண் விழுந்தால் அது தேசத்துரோகமாம் பாருங்கோ. அப்ப காலம் முழுவதும் தலைவரையும் போராளிகளையும் வைச்சு நீங்கள் நடத்துற பிழைப்புக்கு என்னடா பெயர்? பள்ளிக்கூடம்


லாசப்பலில் அதிகமான தமிழ் மக்களால் நாடப்படும் இறைச்சிக் கடை

ASI Boucherie
PARIS - FRANCE



வாடிக்கையாளர்கள் அதிகம் ஆனதால்
தினமும் புதிய இறைச்சிகள்!
தமிழ்வாசம் வீசும் ஐரோப்பிய
இல்லங்களில் எல்லாம்
இப்பொழுது ஆசி, இறைச்சிக் கடையின்
இறைச்சிக் கறி வாசம்

அன்பான வரவேற்பு! தினமும் புதிய இறைச்சி
வகைகளே விற்கப்படுகின்றது

ஆம்! ஐரோப்பிய நாடுகளில் இருந்து பாரிஸிற்கு வருபவர்கள்
சுவையான இறைச்சி உண்பதற்காக ஆசி இறைச்சிக் கடையில்
மொத்தமாக இறைச்சி வாங்கிச் செல்கின்றார்கள்

இது எப்படி சாத்திமாகின்றது?

தரமான இறைச்சியே விற்கப்படுவதால்
வாடிக்கையாளர்களோ அதிகம்

195, rue du Fbg. St-Denis
75010 Paris, Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord

ஆடு முழுதாகவோ
அல்லது அரையாகவோ
கிலோ 4,50€



தினமும் ஆட்டுப்பங்கு

வாடிக்கையாளர்கள் அகரம் இதழைக்
கேட்டுப் பெறவும்

தொடங்கி, சமையல் வரைக்கும் உங்கட கவட்டைக்குள்ள இருக்கவேணும் எண்டு நினைக்கிறதுக்குப் பெயர் விடுதலை இல்லையடா. அதுக்குப் பெயர் கட்ட பஞ்சாயத்து.

அப்பிடித்தான் பாருங்கோ அந்த நகரத்திலே இருக்கிற ஒருத்தர் தன்ர வீட்டு நிகழ்வைக் கொண்டாடும் முகமாக வேறொரு இடத்தில சாப்பாட்டுக்குச் சொல்லி இருக்கிறார். அடுத்த நாள் அவருக்கு தொலைபேசி அழைப்பு வந்திருக்கு. வேற ஆர், அழைச்சது கட்டப் பஞ்சாயத்தின்ர துணைத் தலைவர் தான் பாருங்கோ. என்ன நீங்கள் எங்களிட்ட சாப்பாடு எடுக்காமல் வேற இடத்தில சொல்லி இருக்கிறியள் எண்டு அறிஞ்சம். ஏன் எங்கட சாப்பாடு உங்களுக்கு சாப்பாடாத் தெரியேல்லையோ எண்டு துணை துள்ளிக் குதிச்சிருக்கு. அதுதான் உண்மை எண்டு மனசுக்குள்ள முணுமுணுத்தாலும் வெளில சொல்ல முடியாத சூழ்நிலை நம்மட ஆளுக்கு. இல்லை எனக்குத் தெரிஞ்ச ஆள் எண்ட படியால சமையல் பொறுப்பை அவரிட்ட குடுத்தனான் எண்டு சொல்ல, அவர் உங்களுக்கு சொன்ன செலவிலும் பார்க்க ஐம்பது சதம் ஒரு சாப்பாட்டுக்கு நாங்கள் குறைச்சு தருவம் எண்டு பஞ்சாயத்துத் துணைத் தலைவர் முறுக்கியடிச்சாராம்.

அதிலையும், ஆ... நீங்கள் அவரின்ர ஆளல்லே, உங்கட தம்பியாரின்ர பிள்ளை எங்கட பள்ளிக்கூடத்தில தானே படிக்குது எண்டு வெருட்டுற மாதிரி தோரணைக் கதைகள் வேறையாம். கலியாண வீட்டில நான்தான் மாப்பிள்ளை, செத்தவீட்டில நான் தான் பிணம் எண்டு எல்லாத்துக்கையும் ஒரே ஆளைத் தலை நுழைக்க விட்டால் உதுதான் பிரச்சனை பாருங்கோ. சாப்பாடு எங்களிட்ட எடுக்காட்டில், எல்லாப்பக்கத்தாலையும் ஆய்க்கினை குடுப்பம் எண்டு சொல்லாமல் சொல்லுறது. எங்களிட்ட எடுக்காட்டில் பள்ளிக்கூடத்தில் உங்கட பிள்ளை தேர்ச்சி பெறுவதை பார்ப்பம் எண்டுற மாதிரி வெருட்டி ஒரு நிகழ்வைத் தங்கட கையில எடுக்கிறது எவ்வளவு கேவலமான விசயம் எண்டு சொல்லுங்கோ பார்ப்பம்.

அதிலையும் கேவலம் என்னெண்டா, பொம்பிளை பிள்ளைகள் உள்ள வீட்டில இப்பவே சொல்லி வேற வைக்கிறாங்களாம் எண்டா பாருங்கவன். உங்கட பிள்ளை பெரிய பிள்ளை ஆனால் சாப்பாடு நாங்கள் தான் சமைப்பம் எண்டு படலையில தட்டிச் சொல்லாத குறையா சொல்லுறாங்களாம். எடே கோதாரி விழுவாரே, உதை விட பிச்சை எடுத்துச் சீவிக்கலாம் பரதேசிக்கூட்டம். உந்த பூப்புனித நீராட்டு விழாவை வீட்டுக்குள்ளேயே கொண்டாடி முடிக்கவேணும் எண்டு அறிவு சீவிகள் எத்தனையோ இடங்களில தொண்டை வறளக் கத்துறாங்கள். உவங்கள் என்னடா எண்டா அதைக் கட்டாயம் நடத்த வேணும் எண்டு ஊக்குவிக்குறாங்கள்.

அப்பிடித்தான் பாருங்கோ கிட்டடியில ஒரு திருமண நிகழ்வில கட்டப்பஞ்சாயத்துக் குழுதான் சாப்பாடு எண்டறிஞ்சு கனபேர் சாப்பிடாமலேயே எழும்பிப் போட்டாங்களாம். ஏன் எண்டால் ஊருக்குள்ள செய்யுறது முழுக்க முடிச்சவிக்கித்தனம். வெளியில விடுதலைப் போராட்ட வீரர்கள் போல முகமூடி அணிஞ்சு திரியுறது பாருங்கோ. அடேய், நீங்கள் என்ன கோதாரித்தனத்தையாவது செய்யுங்கோ. நாங்கள் ஏன் வேண்டும் கேட்க வரமாட்டம். ஆனால் ஆ ஊ எண்டால் உடன தலைவரையும் மாவீரரையும் இழுத்து வியாபாரம் செய்தால் உங்களைத் தோலுரிக்காமல் விடமாட்டம்.

தங்கட சேவையில வாற ஒரு சதம் கூட தாங்கள் எடுக்கிறேல்லையாம். அப்பிடி எண்டால், ஏன் வீடு வீடாப் போய், சமையல் வேலையை உங்களுக்குத் தரச்சொல்லி படலையைத் தட்டுறியள்? இல்லைத் தெரியாமல் கேக்குறன். அப்பிடி எண்டால் அதே சமையல் வேலையைச் செய்யுற அடுத்தவனையும் வாழவிடலாமே ? அவனும் சமையல் வேலை மூலம் கிடைக்குற பணத்தில முடிஞ்ச அளவு ஊருக்கு உதவி செய்வான் தானே ? அதென்ன நீங்கள் மட்டும் தான் முட்டையில புடுங்கலாம், மற்றவன் புடுங்கக் கூடாது எண்டு குத்தி முறியுறது? எனக்கு விளங்கேல்லை பாருங்கோ உங்கட ஆலவட்டம். உதில கட்டபஞ்சாயத்துத் துணைத்தலைவர் படுற பாடு பெரும் பாடு.

அவர் கதைக்கிற கதையளைக் கேட்டியள் எண்டால்,படு அகோரம் எண்டு சொல்லிச்சு அங்க உள்ள ஒரு மனிசன். பதின்மூன்று வயசில இங்க வந்து போராட்டத்தை தாங்கி பிடிச்சவராம். பரதேசி குடியும், கும்மாளமுமா வீதி வீதியா சுத்திப்போட்டு, இப்ப இஞ்ச விடுதலை வகுப்பு எடுக்குது . நீ பதிமூன்று



30% - 60% மலிவு விற்பனை
3 Underskirt : 10€
10 Lining Metriya : 15€
4 Nighty : 20€
3சரம் : 12€
Wedding Sarees 30% to 60% DISCOUNT!!
Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Rheinische Straße 81, 44137 Dortmund
Telephone: 0231 5450028 | Mobile: 0171 33 06 542

வயசில இஞ்ச வந்துதான் போராட்டத்தைத் தாங்கி பிடிக்க வேண்டிய தேவை இல்லை. நீ நினைச்சிருந்தால் ஊர்லயே நிண்டு தாங்கிப் பிடிச்சிருக்கலாம். இஞ்ச வந்து கதை விட்டு, மற்றவனை மடக்கிக் குத்த வெளிக்கிட்டால், பல இடங்களிலே வாங்கித் தெளிய வேண்டி வரும் தம்பி.

இஞ்ச அவனவன் தங்கடை வாழ்க்கையையே விடுதலைக்காக அர்ப்பணிச்சு திரிஞ்சு போட்டு இப்ப ஓய்வாக இருக்க வேண்டிய கடைசிக் காலத்தில, வீதியில குப்பை அள்ளி வேலை செய்து வாழ்க்கையை ஓட்டுறான். நீர் என்னடா எண்டால், கட்டப்பஞ்சாயத்து நடாத்தி, அகப்பையைத் தூக்கி ஆட்களை வெருட்டி உம்மட வயிறு வளர்க்கிற வேலையை பார்க்கிறீர். அதுக்குள்ள பிள்ளையளை நாசமாக்குறதுக்கு பள்ளிக் கூடத்தையும் எடுத்து வைச்சுக் கொண்டு பஞ்சாயத்துத் தலைவரோட சேர்ந்து கும்மாளம் வேற. ஒரு விதத்தில கருணாவும் அப்பிடித்தான் மட்டக்களப்பில இருந்துகொண்டு அநியாயம் பண்ணி கடைசியில இயக்கம் ஓட ஓட அடிச்சுக் கலைச்சது. அதுமாதிரி ஒரு நாளைக்கு உங்கட ஒட்டுமொத்தக் கூட்டத்தையும் சனம் அடிச்சுக் கலைச்சு துவம்சம் பண்ணுற நாள் வரும் கண்டியளோ. கத்தி கரண்டி தெறிக்க ஓட வேண்டிய நாள் கெதியில வரும்.

சமையல் எண்டுறது அன்போட, பரிவோட செய்யுற விசயம். அதை வியாபாரமாக்கி, போராளிகளின்ர வாழ்க்கையை மேம்படுத்துறதுக்காகச் செய்யுறம் எண்டு புருடா விடாமல்,ஒழுங்கா தொழிலா செய்யுங்கோடா. இல்லையெண்டால் ஒரு நாளைக்கு கறியோட கறியா கருக வேண்டிவரலாம். ஏனெண்டால் மண்ணுக்காகப் போராடி இயலா நிலையில இருக்கிறவங்களின்ர பெயரை உபயோகிச்சுத் தொழில் செய்யுறது பொல்லாத சாபத்துக்குரிய செயல்.

**ஏழை கதை மேடையிலே சொல்லுவார்**
**அவர் எட்டடுக்கு மாடி கட்டி கொள்ளுவார்**
**யார் என்ன குற்றம் செய்தாலும் கேளடா**
**அதில் என்றும் அச்சம் இல்லை என்று கூறடா**

- அப்ப வரட்டே





அன்புச் செல்வன்

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?


ஈழத் தமிழ் இன அழிப்பை திட்டமிட்டு செயற்படுத்தியது இந்தியா. ஆப்பத்தை பகிர்ந்து தின்ன தெரியாத சிங்களம், இந்தியக் குரங்கிடம் நீதி கேட்டு மொத்தமாக பறிகொடுத்த பூனையின் பரிதாபக் கதை ஈழத் தமிழின அழிப்பு. இன்று ஒற்றுமையின் வடிவம் என இனந்து வெறியன் வல்லபாய் பட்டேலுக்கு 3,000 கோடி ரூபாய் செலவில் உலகிலேயே அதிக உயரமான சிலையாக 182 மீட்டர் உயரச் சிலையை மோடி அரசு திறந்து வைத்துள்ளது.

அதன் பிடத்தில் பல்வேறு மொழிகளில் ஒற்றுமையின் சிலை என எழுதி விட்டு, தமிழில் படுகொச்சையாக தமிங்கிலத்தில் ‘ஸ்டேட்டுக்கே ஒப்பி யூனிட்டி’ என எழுதி, குஜராத் மாநில அரசு நரேந்திர மோடியின் இந்தியாவின் இன ஐக்கியத்தைத் தோல் உரித்துக் காட்டி உள்ளது. சிலையைத் திரை நீக்கம் செய்த போது, மோடி பேசிய வார்த்தைகள் இந்தியாவின் இறையாண்மை என்பதாகும். இந்திய அரசமைப்பு சட்டம் மாநிலங்களுக்கு வழங்கிய அடிப்படை இறையாண்மை உரிமைகளைப் பறித்து, காலில் போட்டு மிதிக்கும் மோடி, பகவத் கீதையைக் கையில் எடுத்து, இன அழிப்பை நடத்திய ஹிட்லரின் மறு அவதாரமாக மாறிவிட்டார்.

சட்டம், ஒழுங்கு, சனநாயகம் என்பவை எல்லாம் இலங்கை - இந்திய அரசுகளுக்கு ஒவ்வாதவை. இந்திய அரசமைப்புச் சட்டத்தை இந்திய ஆட்சியாளர் எப்படி மதிப்பதில்லையோ? அப்படித்தான் இலங்கை ஆட்சியாளர்களும். சுதந்திர இலங்கையின் முதலாவது அரசமைப்புச் சட்டத்தில், சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட 29வது உப விதியை, அதே வருடத்தில் மீறும் வகையில் மலையக மக்களின் குடி உரிமையை பறித்து, நாடற்றவர் ஆக்கி, நாட்டை விட்டு விரட்டியது. அதற்கு நேருவின் இந்தியாவும், இந்திராவின் இந்தியாவும் ஆதரவு வழங்கின.

இலங்கை அரசு 1956ல் தனிச் சிங்கள அரச மொழிச் சட்டத்தால் பின்னர் 2வது பாராளுமன்ற சபையான மேல் சபையை நீக்கியது. பின்னர் 1972ல் தன்னிச்சையாக சிங்களம் குடியரசுப் பிரகடனம் செய்து, 1982ல் நிறைவேற்றிது. ஜனாதிபதி ஆட்சி பயங்கரவாத தடைச் சட்டம் என பாராளுமன்ற ஜனநாயக விழுமியங்களை எல்லாம் சிதைத்து, ஆரிய சிங்கள பௌத்த ஆட்சியை நடத்தி வருகிறது.

இனிமேலும் இலங்கை இந்தியத் தமிழருக்கான




ஜனநாயக அரசியல் உரிமைகள் அனுபவிக்கக் கூடிய சூழ்நிலைகளை, இரு நாடுகளிலும் உள்ள அரசுகளும், ஆட்சியாளர்களும் தரப் போவது கிடையாது. மொத்தத்தில் இப்பிராந்தியத்தில் தமிழ் இனம் அழித்து, ஒழிக்கப்படும் சூழல் முழுமை அடைந்து விட்டது.

ஆரிய திராவிட (தமிழ் இனப்) போர் வெற்றி நடை போடுவதை மேலே உள்ள படம் காட்டுகிறது. இதற்கு தமிழ் இனம் என்ன செய்யப் போகிறது?

சென்ற இதழில் , ‘காலம் தனித் தமிழ் ஈழம் நோக்கி சர்வ தேசத்தை திருப்புகிறதா?’ என்ற கேள்வியோடு தொடங்கி இருந்தோம். அதற்கான விடை இலங்கையிலும், இந்தியாவிலும் இடம் பெற்ற நிகழ்வுகள் தந்து விட்டன. அவற்றை ஈழத் தமிழினம் புரிந்து கொள்ளும் விதத்தில் தான் அது தனது மரண சாசனத்தை எழுதும்.

ஈழத் தமிழினம்தான் வரலாற்று மற்றும் மானுடவியல் தமிழ் மொழி இயல் ஆய்வுகளின் படி, உலகத் தமிழ் இனத்தின் தோற்று வாயின் ஒரே இணைப்பு. அதாவது, ஈழத் தமிழன்தான் உலகத் தமிழ் இனத்தின் வரலாற்றுத் தொப்புள் கொடி. அது அறுந்தால் அல்லது அறுக்கப்பட்டு விட்டால், தமிழ் இனத்தின் அத்தனை பெருமைகளையும் உலகத் தமிழ் இனம் இழந்து விடும். அப்படி ஒரு நிலை ஏற்படுத்தப்பட்ட பின்னர், தமிழன் ஒரு இனமாக உலகில் அடையாளப் படுத்தப்பட மாட்டான்.

உலகம் 'ஜிப்ஸி' என்ற இனத்தை எப்படி உருவாக்கியதோ? அப்படியான ஒரு இனமாக தமிழன் மாற்றப்பட்டு விடுவான். 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் உலகம் தமிழனை 'கூலிகள்' என்றே அழைத்தது. ஆங்கில அகராதிகள் அப்படித்தான் தமிழனை வகைப்படுத்தி அழைத்தன.

இந்தியாவுக்குள் முதலில் ஆட்சி அமைத்த மெகலாய அரசுகள் தமிழ் நாட்டைப் பிடித்த பின்னர், தமிழ் மக்களை கப்பல் கப்பல்களாக சிறைப்படுத்தி, ஆண்களை அரபுநாடுகளில் அடிமைகளாக விற்றும், பெண்களை அராபியர்களின் வீட்டு வேலை அடிமைகளாக்கி மதம் மாற்றியும், தமது மதத்தை பரப்பினர் என்பதற்கான வரலாற்றுப் பதிவுகள் உண்டு.

அதன் பின்னர் வந்த ஐரோப்பியரும், தமது அடிமை வியாபரத்தை தமிழ் மக்களை வைத்தே நடத்தினர். அவர்களின் குடியேற்ற நாடுகளில் பெருந் தோட்டங்களை உருவாக்கவும், அவற்றில் அடிமைகளாக வேலை செய்து, பின் நிலமற்ற கூலிகளாக மாற்றப்பட்டவர்களே!. கிழக்குத் தீமோர் மொரிசியஸ் இலங்கை மற்றும் ஆபிரிக்கத் தோட்டங்களில் அடிமை அல்லது அடிமாட்டுக் கூலித் தொழிலாளர்களாக வாழ்ந்து, இன்று உலகத் தமிழ் இனமாக கூறப்படும் தமிழ் மக்கள்.

இன்று இவர்களில் பெரும்பாலான மக்களின் சந்ததியினர் தமிழ் மொழியே தெரியாத, தமிழே முகவரி தொலைந்த இன, மொழி, மத அடையாளங்கள் அற்ற மக்களாக மாறிவிட்டனர். வரலாற்றில் 2009ல் ஈழத்தில் நடத்தப்பட்ட இன அழிப்புப் போர்தான் மொத்தத் தமிழ் இனத்தின் அழிப்பாக இருந்தது இருக்கிறது. இதுவே இறுதி நிகழ்வாக இந்தியாவும், உலகமும் மாற்றி விட முயலுகின்றன.

அதன் வெளிப்பாடுதான் 21ம் நூற்றாண்டின்



முதல் இன அழிப்புப் போராக இடம் பெற்ற இப்போர் பற்றிய நேர்மையான, நீதியான விசாரணை எதுவும் நடை பெற்று விடாமல் உலக வல்லரசுகள் மிக கவனமாக, ஐ.நா. சபையை கட்டுப்படுத்தி வருகின்றன. ஈழம் என்பதும் தமிழனின் இறையாண்மை என்பதும், இந்திய அமெரிக்க சீன அரசுகள் தோற்றம் பெற முன்னரே ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்த உரிமைகள்.

புதிய உலக நடை முறைக்கு ஏற்ப சகல கட்டுமானங்களையும் கொண்ட தனி அரசை உருவாக்கி, சர்வதேச அங்கீகாரம் பெற உலக நாடுகளின் அனுசரணையோடு நடத்தப்பட்ட அமைதிப் பேச்சுகளை, பலநாடுகளில் சதிகொண்டு முறியடித்துப் பெரும் இன அழிப்புப் போரை நடத்தியதில், ஐ.நா. உட்பட உலக வல்லரசுகள் கலந்து கொண்டன. அதனால் எமக்கான நீதியை இலகுவில் பெற்று விடமுடியாது.

எனவே உலகத் தமிழ் மக்கள் தமக்கான அரசியல் உரிமைப் போராட்டத்தை, உலக அளவில் ஒருங்கிணைத்துப் போராட வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே தொடரட்டும் தமிழ் இனவிடுதலைப் போராட்டம்.

தேடுவோம் தொடர்ந்து...


சுவிஸ் நாட்டில் மொத்த விற்பனையாளரும், ஏக விநியோகஸ்தரும்...



Sai Trader GmbH

Importeur für frische, exotische Gemüse | Früchte & Fische

Switzerland

Tel. +41 44 885 86 50

Fax. +41 44 885 8651

Cell. +41 79 218 70 75

www.saitrader.com

உங்கள் ஸ்தாபனத்திற்கு மரக்கறி, மீன் வகைகளை மொத்தமாக இறக்குமதி செய்து தர நாட வேண்டிய ஒரே இடம்

Sai Trader GmbH

Wilenbachstrasse 3

8185 Winkel ZH






வரசித்தி மஹால்

Varasithy Mahall

Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும்
உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில்
மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...



திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து
வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை
அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும்
குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**



**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com




# அவனா? இவன்!

இந்தப் படத்தை சுவரில் புடை சிற்ப வடிவில், அவன் 8வயதுச் சிறுவனாக இருந்த பொழுது யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலில், வட கிழக்கு சுவரில் யாகசாலை மேல் முலையில் வண்ணச் சிற்பமாகச் செய்திருந்தார்கள்.

இதே ஆலயத்தில் வழிபாடு செய்து விட்டு வெளியேறிய கிருஸ்தவரான யாழ் நகரசபை பிதாவாகவும், பாராளுமன்ற உறுப்பினர் திரு. அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டபோது, அடிமனதில் கிருஸ்ண பக்தனாக வாழ்ந்து வந்த அவனுக்கு, இக்கொலை அக்கிரமமாகப் பட்டது. கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு, பிற மதத்தில் பிறந்த ஒருவனே, படு கிரமமாக ஞாயிற்றுக் கிழமைதோறும் காலை 8.மணிக்கு தவறாமல் வழிபடும் ஒருவனை, பக்தன் எனச் சொல்லாமல் வேறு எப்படிச் சொல்ல முடியும்? சிற்றறிவு படைத்த எமக்கே அவன் பக்தனாகத் தெரியும் பொழுது, பரம் பொருளான இறைவனுக்கு தெரியாமலா போகும்?

அது அவன் விதி அல்லது கர்மவினை, பாவி என்றும், புனிதன் என்றும் யாரும் கிடையாது. எல்லாரும் அவரவர் கர்ம வினைக்கேற்ப இன்ப, துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்கிற ஆன்மீக விளக்கம் சரியாகத்தான் தெரிகிறது. வள்ளுவரும் ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும் என்றார். இதன்பொருள் எந்த விதமான தடைகள், பாது காப்புகள் சுற்றி நின்றாலும், ஊழ்தான் வெற்றியோடு முன்பாக நிற்கும் என்பதாகும்.

இவை எதனையும் பற்றிக் கவலை கொள்ளாமல், அந்தத் துயர நிகழ்வை வெறும் செய்தியாக, இன அரசியல் வெற்றியின் தொடக்கப் புள்ளியாகவும் அவன் பார்த்த முட்டாள் தனத்தை 2009 மே 17 கொடுத்த தீர்ப்பு பேரிடியாக விழுந்தது.

ஆனால் அந்தச் சிறிய வயதில் அவனது மனதைப் பெரிதும் பாதித்த அந்த மகா பாரதப் போர் பற்றிய ஐந்து வெண் புரவிகள் பூட்டிய தேரை, பகவான் கிருஸ்ணன் ஓட்ட, அர்ச்சுணன் போர்க் களத்தில் போரிடும் காட்சி, அவன் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகிறது. தர்மத்துக்காகப் போராடு, அதன் பலனை எதிர்பாராதே! என்ற போதனை அவன் உள்ளத்தில் புகுந்து விடுகிறது.

படிப்படியாக அவன் கேள்விகளை மற்றவர் மீது தொடுக்கவும், அதன் சரி, பிழை, நியாயம், அநியாயம் பற்றி கடுமையாக தர்க்கம் செய்யவும் முற்படுகிறான். அவனைப் பொறுத்தவரை அவனது மனதுக்கு எது சரி? எனப் படுகிறதோ அதை நடத்தி முடிக்க வேண்டிய கிருஸ்ணனாக வாழ முற்படுகிறான். அதனால் அவன் தனது உற்றார், உறவினர், நண்பர்களைப் பகைத்ததோடு தனித்து விட்ட பொது சன எதிரியாகவும் மாறி விடுகிறான்.

அதே நேரத்தில் அவனால் நியாயம், நீதி, நன்மை என்பவற்றைப் பயனாக பெற்றவர்களும், நன்றி மறந்தவர்களாக அவனை விட்டு

# Hot Chili

## Restaurant



Oberhausen
நகரில்
பிரமாண்டமான
தமிழர்
உணவகம்



தாயக சுவையும், மணமும் மாறாத
தரமான உணவு வகைகளை
குடும்பத்துடன் உண்டு மகிழ்ந்திட
ஓபகவுசன் நகரில்
ஒரு தமிழர் நிறுவனம்

**Elsässer Str.36**
**46045 Oberhausen**
**Tel : 0208 20 79 75 16**



ஒருமுறை வந்து சுவைத்துப் பாருங்கள்!
உள்ளம் மகிழ்ந்து கொண்டாடுவீர்கள்

விலகிவிடும் புத்திசாலிகளாக வளமாக வாழ, அவன் மட்டும் சமுதாயத்தில் ஏமாளியாகி விடுகிறான். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கிருஸ்ண வழிபாடு மிக அரிதாகவே இருந்தது. நகருக்குள் பெருமாள் கோயில், துன்னாலையில் வல்லிபுர ஆழ்வார் உரும்பிராயில் கிருஸ்ணன் கோயில், பொன்னாலையில் வரதராசப் பெருமாள் மட்டுமே அவனுக்குத் தெரிந்தவை. இவை அனைத்துமே நல்லூர் இராசதானியோடு தமிழர் வரலாற்றில் இடம் பெற்றகோயில்கள்.

பகவத் கீதை இன்று உலகப் பிரபலம் பெற்றுவிட்ட, விஸ்ணு பக்தர்களின் மத நூலாகி விட்டது. ஆனால், இது அன்பைப் போதிக்கும் நூல் அல்ல. இரண்டாம் உலகப் போரில் பேரழிவுகளைச் செய்த அடொல்ஃப் ஹிட்லர் இந்நூலைத் தனது வழிகாட்டியாக கைக் கொண்டான் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

உண்மையாகவே இது ஓர் ஆன்மீக அல்லது அறநெறி போதிக்கும் நூல் கிடையாது. ஆரியரின் அரசியல் அறம் கூறும் மனுதர்மம் என்கிற உண்மையைப் பலப் பத்தாண்டுகள் கழிந்த பின்னரும், மத அமைப்புகளுடன் கொண்ட தொடர்புகளாலும் புரிந்துகொண்டான்.

ஆனால், பல ஆன்மீக மற்றும் இலக்கியப் பேச்சாளர்கள் பகவத் கீதையையும், மகாபாரத இராமாயணக் கதைகளையும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதையே ஆன்மீகம் என்று தமது வயிற்றுப் பிழைப்பாக வாழ்ந்து காட்டி வருகிறார்கள். இராமாயணமோ, மகா பாரதமோ அன்பை, அறத்தை, மனித நேயத்தைப் போற்றிப் பேணும் நூல்கள் அல்ல. ஆகையால் அவற்றை ஆன்மீக போதனைகளாக மக்களிடம் போதிக்கப் படுவதை அவனால் ஏற்க முடியவில்லை.

இராமாயணத்தில் ராமனின் பஞ்சவடி இருந்த பிரதேசம், இராவணனின் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதி எனச் சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். எப்படிப் பார்த்தாலும் அப்பகுதி தசரத சக்கரவர்த்தியின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம் அல்ல. அதனால், ராம இலக்குவ சீதை என்போர் அனுமதி அற்ற அந்நியர்கள்.

அங்கே இராவணன் தங்கையான சூர்ப்பநகையின் காது, மூக்கு, மார்புகளை அறுத்து கொடூரமாக்கிய பாதகத்தைச் செய்த இலக்குவனின் செயலை, ஒரு அணுவளவும் இந்த ஆன்மீகப் போதனையாளர்கள் கண்டித்ததே கிடையாது. ஆனால், மேடைகளில் அடிக்கடி பெண் உரிமை பற்றிப் பேசிக் கைதட்டல் வாங்குவதில் மட்டும் வல்லவர்களாக உள்ளார்கள்.

வசிட்டர் ராமனின் வில் வலுவைக் கொண்டு,



ஆரியரின் உள்ளூர் மக்களின் ஆடு, மாடுகளை தீயில் போட்டு எரிக்கும் யாகத்தை தடுக்கிறார்கள் என்பதால், அவர்களை அழிப்தே தனது அறமாகக் கொண்டு காடுகளின் தலைவியான தாடகையை கொன்றும், வேறும் பல மக்களின் தலைவர்களோடு போரிட்டும், ஆரிய திராவிட போருக்கு வழி வகுத்தவரே வசிட்டர்.

அவரை தவ சிரேஸ்டர் என்றும், முக்காலமும் அறிந்த ஞானி எனவும் தமிழ் மக்களை நம்பவைத்து, ஆரிய ஆதிக்கத்துக்கு அடிமைப்படும் மனோ பாவத்தை இந்த ஆன்மீகவாதிகள் கடவுளின் பெயரால் செய்து வருகின்றனர்.

தான் பிறந்த இனத்தின் சோற்றைத் தின்று வளர்ந்த இவர்கள், தனது இனத்தின் அழிவுக்கே சூனியம் செய்யும் இனத் துரோகிகள் என்று சொல்லாமல், இவர்களை ஆன்மாக்களை ஈடேற்ற வந்த ஆன்மீக ஞானிகள் எனப் பாராட்டும் அறிவீனம் அழிக்கப்பட வேண்டும்.

சென்ற நூற்றாண்டின் தலை சிறந்த ஆன்மீகப் பிரசங்கியாக சமயாசார சீலராக, புராண இதிகாச தமிழ் இலக்கியங்களில் தலை சிறந்த வித்தகராக, கேட்பவரை இசையாலும், தமிழாலும் மணிக் கணக்கில் பரவச நிலையில் ஆழ்த்தும் திறன் படைத்தவர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள். 1950 காலப் பகுதியில் அவர் முதன்முதலாக இலங்கை வந்திருந்தார்.

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

# PAGEVISION

# www.pagevision.ch

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



**PC Systeme komplett ab CHF 329.-!!**
**Keine versteckten Kosten, alles inkl. MwSt.!**



**HP dc7700 Tower**
Intel Core 2 Duo E6300 - 2x 1.86GHz
80GB Festplatte
2GB DDR2 RAM
DVD/CD-Brenner
8x USB 2.0
1 Jahr Garantie

**CHF 60.- inkl. MwSt.**

**Lenovo T410 Notebook**



Intel Core i5 m540 - 2x 2.53GHz
250GB Festplatte
4GB DDR3 RAM
DVD-Brenner
3x USB 2.0, USB 3.0
1 Jahr Garantie

**CHF 249.- inkl. MwSt.**

**!! REPARATUREN ALLER MARKEN !!**




- sehr schnelle Lieferung!
- Hauslieferungen
- Vor-Ort Installationen
- Netzwerklösungen für Firmen
- Reparaturen aller Marken!

**iPhone Reparaturen:**
**www.iphonefan.ch**



**Mac Pro 1.1**
2x 5150 (4x 2.66GHz)
250GB Festplatte
8GB DDR2 RAM
Nvidia Geforce 7300GT Grafikkarte, mit 256MB RAM
1 Jahr Garantie

**CHF 290.- inkl. MwSt.**

## günstige gebrauchte Computer Reparaturen aller Marken

# www.pckaufen.ch

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50
Rosengartenstrasse 4- 8037 Zürich - Tel: 044 271 00 07

für Neuware besuchen Sie

**pagevision.ch**

அவரை அவன் அவனது கிராமத்துக் கோயில் திருவிழாவின் பொழுது, கையில் சப்லாக் கட்டைகள் எனும் தாளக் கருவியோடு ‘கைத்தலம் நிறை கனி’ என்ற விநாயகர் பற்றிய அருணகிரி நாதரின் திருப்புகழையும், 'அம்பலத்தரசே அருமருந்தே” என்ற பாடலையும் கணீர் குரலில் பாடி, கதாப் பிரசங்கத்தை நடத்தினார். அதன் பின்னர் அவ்விரு பாடல்களும் அவருடைய பாணியும், பலரது பாணியாகியது. அதன் பின்னர்தான் இசையும், தமிழும் கோயில் வீதிகளில் ஒலிக்கத் தொடங்கி, பின்னர் ஆறுமுகம் சின்னமணி போன்ற வில்லுப்பாட்டு கலைஞர்கள் தோன்றினர்.

அவனையும் வாரியாரின் பேச்சுகளும், ஒழுக்க நெறிகளும், தமிழ் புலமையும் கவர்ந்து கொண்டதால் அவர் மீது அளவற்ற அன்பும், அபிமானமும் கொண்டிருந்தான். அவை அனைத்தையும் சினிமாக்களில் தோன்றி, அவர் ஆசீர்வதித்த திருமணத் தம்பதிகள் திரைக் கதைப்படி பிரிந்து போவதும், சத்தியம், தர்ம ஒழுக்க நெறிகளை துச்சமென நடப்பதும், அவனது மனதை பெரிதும் உறுத்தின.

சினிமாவில் ஐயர் மந்திரம் ஓதி, அக்கினி வளர்த்து, தாலிகட்டி பின்னர் அவற்றுக்கு எந்தவித மதிப்பும் இல்லாமல் நடந்து கொள்வதுமான காட்சிகளால், ஆயிரங்காலத்துப் பயிர் எனப் போற்றி வளர்க்கப்பட்ட திருமணச் சடங்குகள், வெறும் வேடிக்கை விளையாட்டாக எமது பண்பாடும், சமயச் சடங்குகளும், சினிமாக்களால் சீரழிக்கப்பட இப்பெரும் ஆன்மீக ஆசாரசீலர் துணை போனதை, அவனால் தாங்க முடியவில்லை. அவன் இப்பொழுது பகுத்தறிவுக் கண் கொண்டு பார்க்கத் தலைப் பட்டுவிட்டான்.'



பள்ளி நாட்களில் சில நண்பர்களின் மூலம் தமிழக தி.மு.க அரசியலும் 52ல் வெளியான ‘பாராசக்தி’ படம் எழுப்பிய சமூகநீதி, போலிப் பக்தி தொடர்பான புதிய பார்வை, ஈழ விடுதலைப் போரின் தாக்கங்கள், கடவுள் நம்பிக்கை, ஆலய வழிபாடுகள் அங்கு தமிழனும், தமிழும் அந்நியப் படுத்தப்பட்ட நிலைகளைக் கண்டு அவனால் ஜீரணிக்க முடியாதவை. தமிழ் இனத்தின் அழிவுகளுக்கும், அடிமை நிலைக்கும் இந்தச் சமயங்களும், அவற்றின் அமைப்புகளுமே காரணம் எனத் தெளிவாகத் தெரிந்து கொண்டு விட்டான்.

அவன் முடிவு சரிதான் என்பதை, இம்மாதம் நல்லூர்க் கந்த சுவாமி கோயில் கூரை தங்கத் தகட்டால் அலங்கரிக்கப் பட்ட சேதி உறுதியாக்கி விட்டது.

இன்று தமிழ் இனத்தின் அறம், பொருள், இன்பம் அனைத்தும் ஆரிய மத வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட, முழுமையான அழிவை அவன் கண்டு தெளிந்து விட்டான். அதனால் அவனது தமிழ் இனம் இன்று உள்ள அழிவு நிலையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்றால்? மதம், கலாச்சாரம், ஆன்மீகம் என்ற போர்வையில் நடத்தப்படும் அரசியலை அம்பலப் படுத்தினால் மட்டுமே! ஆக்க பூர்வமான சிந்தனைகளும், செயற்பாடும் உருவாகும். ஆக்க பூர்வமான சிந்தனைகளும், செயற்பாடுகளும் இருந்தால் மட்டுமே! தமிழ் இனத்தின் வருங்கால அரசியல் உறுதிப்பாடு சாத்தியமாகும்.



சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles



தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும்
இங்கு செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

info@nsjewellery.com Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

GUARANTEE BEST PRICE GUARANTEE

Rani palace

044 440 60 52
ranipalace60@gmail.com



உயர்தர
புடவைகள் மற்றும்
துணி வகைகள்
வாங்க
சிறந்த இடம்

Tel : 044 440 60 52

Neugasse 60, 8005 Zurich - Switzerland



# ஜனநாயகப் படுகொலை

சண் தவராஜா

சிறிலங்காவின் இன்றைய அரசியல் நிலவரம் புதைசேற்றினுள் கால் வைத்த கதை போல மீளவும் முடியாமல், முழுகவும் முடியாமல் என்ற நிலையில் தொங்கிக் கொண்டிருக்கின்றது. அக்டோபர் 26ஆம் திகதி அரசுத் தலைவர் மைத்ரிபால சிறிசேன விடுத்த அறிவிப்பு, உள்நாட்டு மக்களை மட்டுமன்றி, உலகெங்கும் வாழும் மக்களையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியது. உள்நாட்டு மக்கள் என்னும் போது சாதாரண மக்கள் மாத்திரமன்றி, நாட்டின் தலைமை அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கூட அதிர்ச்சிக்கு ஆளாக்கி இருந்தது.

கிட்டத்தட்ட நான்கு வருடங்களுக்கு முன்னரும் கூட மைத்ரி அவர்கள் இதுபோன்ற ஒரு திடீர் அறிவிப்பை வெளியிட்டு இருந்தார். அதுதான் அப்போதைய தலைமை அமைச்சரும், சிறி லங்காவின் முடிசூடா மன்னன் எனக் கருதப்பட்டவருமான பலம்பொருந்திய மகிந்த ராஜபக்ச அவர்களை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிடப் போவதான அறிவிப்பு. அன்றைய அறிவிப்பை பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, குடிமக்கள் சமூகம், புத்தி ஜீவிகள் எனப் பல தரப்பாரும் வரவேற்று இருந்தனர்.

அது மாத்திரமன்றி, அவரது அறிவிப்பின் பின்னணியில் செயற்பட்ட மேற்குலகமும் அவரது அறிவிப்பை இட்டு மகிழ்வு கொண்டது. ஆனால், பிந்திய அறிவிப்பானது முன்னைய அறிவிப்பு தொடர்பில் மகிழ்வு கொண்ட அனைவரையும் கவலை கொள்ளச் செய்வதாக அமைந்திருந்தது. ஏன்? எதனால்? என்ற கேள்விகள் சுற்றிச் சுழன்றன. இரண்டு வாரங்கள் ஆகியும் இன்னமும் சரியான காரணம் தெரியாமலேயே உள்ளது. உள்நாட்டில் வாழும் மக்களைப் பொறுத்தவரை தற்போது இரண்டு தலைமை அமைச்சர்கள். ஒருவர் அரசுத் தலைவரால் பதவியில் இருந்து அகற்றப் பட்டவர்.

மற்றையவர் திடீரென பதவியில் அமர்த்தப் பட்டவர். இருவரில் யார் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் உண்மையான, சட்ட பூர்வமான தலைமை அமைச்சர் என்பது தொடர்பான விவாதம் பல்வேறு மட்டங்களிலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அரசாங்க அதிகாரிகள் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையில் உள்ளனர். இருவரில் யாரை ஏற்றுக் கொண்டு பணி செய்வது? யாரின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிவது? எனத் தெரியாமல் அவர்கள் திண்டாடி வருகின்றனர். மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரை, நாட்டில் தற்போது அரசியலமைப்புச் சதி ஒன்று நடைபெற்றிருக்கின்றது.

எனவே, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி, அதிகாரபூர்வமான தலைமை அமைச்சர் யார் என்பதைத் தெளிவு படுத்த வேண்டும் என்பதாக உள்ளது. அதுவரை, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தையே உத்தியோகபூர்வமாகஏற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டிலேயே பன்னாட்டு சமூகம் உள்ளது.

ஒரு நாட்டில் புதியவர் ஒருவர் தலைமை அமைச்சராக நியமிக்கப் பட்டால் நட்பு நாடுகள் என்ற அடிப்படையில் அவரது பதவியேற்பை வரவேற்று வாழ்த்துக் கூறுவது மரபாக உள்ளது. மகிந்த ராஜபக்ச அவர்களின் பதவியேற்பை ஓரிரு நாடுகள் மாத்திரமே வரவேற்று அறிக்கை விடுத்துள்ளன. இந்த எதிர்பாராத நிலைமை, தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலையை மைத்ரிக்கு ஏற்படுத்தி உள்ளது. அவர் போட்ட கணக்குத் தப்பாகி விட்ட கவலை ஒருபுறம், சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த கதையாக, தான் உண்டு தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உண்டு என இருந்த மகிந்த ராஜபக்சவை திடீர் தலைமை அமைச்சராக ஆக்கிவிட்டு, பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் திண்டாடும் அவரின் கோபத்திற்கு ஆளாகும் நிலையை உருவாக்கி விட்டுள்ளது.

அரசுத் தலைவர் தேர்தலில் தன்னோடு போட்டியிட்டுத் தன்னைத் தோற்கடித்தவர் என்பது ஒருபுறம் இருக்க, தற்போதைய இக்கட்டான நிலையில் தன்னைச் சிக்க வைத்து விட்டாரே என்ற கோபமே மகிந்தவிடம் அதிகமாக இருக்கும் என்று நம்பலாம். வைகைப்புயல் வடிவேல் பாணியில் சொல்வதாக இருந்தால் “ஆரம்பத்தில் எல்லாமே நல்லாத்தான் போய்க் கொண்டு இருந்தது.’’ அலரிமாளிகையை விட்டு வெளியேறாமல் இருப்பது என்ற முடிவை ரணில் விக்கிரமசிங்க எடுத்தமை, சபாநாயகர் கருஜயசூரிய தனது தனித்துவத்தை நிலைநாட்டும் வகையில் பல அறிவிப்புகளைச் செய்தமை, வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்திந்தமை, ரணிலுக்கு ஆதரவாகக்

தொடர்ச்சி 62ம் பக்கம் பார்க்க...

GENERALI



**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
☎ 058 473 24 45    058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch

www.generali.ch
076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
**EINKOMMENS - VERSICHERUNGEN**
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
**SPARVERSICHERUNGEN**
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
**LEBENSVERSICHERUNGEN**
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
**FAHRZEUGEVERSICHERUNGEN**
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
**RECHTSSCHUTZVERSICHERUNG**
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

### வீட்டுக்கடன்
**HYPOTHEKEN**
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை



எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்



தேவன்

# நான் தெள்ளியவோர் முழுச்சவிக்கி

வைத்தியசாலைகள் கொலைக் களங்களாக மாறுவது ஆசிய நாடுகளில் சாதாரணம். அதிலும் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் இந்த வைத்தியசாலை இப்படித்தான் என்று முத்திரை குத்தும் அளவுக்கு, அந்ததந்த வைத்திய சாலைகளின் அவலம் பெயர் போனது. இங்கே நான் குறிப்பிடுவது அரச வைத்திய சாலைகளின் நிலை பற்றியே! தனியார் வைத்தியசாலைகளில் நிலவரம் பற்றி எழுத ஆரம்பித்தால், அது தொடர் கதையாக மாறிவிடும்.

சுவிட்சர்லாந்திலிருந்து இலங்கை சென்றிருந்த ஒரு குடும்பத்தின் பதினைந்து வயதுச் சிறுவனுக்கு, சாதாரண காய்ச்சல் ஏற்பட, கொழும்பிலிருந்த தனியார் வைத்திய சாலையொன்றில் அனுமதித்திருக்கிறார்கள். அந்தக் காய்ச்சல் பயணக் களைப்பினால் கூட ஏற்பட்டிருக்கக் கூடும். சிறுவன் அனுமதிக்கப் பட்ட சில நொடிகளில் விரைந்து வந்த வைத்தியர் ஒருவர், ஏதோ திரவம் அடங்கிய பையொன்றைத் தொங்க விட்டு, குழாய் மூலமாக சிறுவன் உடலில் ஏற்றப்படும் வகையில் ஊசி ஒன்றைச் செருகிவிட்டுச் சென்றுவிட, மறுநாள் காலை வரை எவ்வகையான திரவம் தன்னுடலில் ஏற்றப்படுகிறது என்றறியாக் குழப்பத்துடனும், மிகுந்த கொசுக் கடியுடனும் அந்தச் சிறுவன் போராடியிருக்கிறான்.




அது சாதாரண குளுக்கோசுக் கலவையென்பது பெற்றோருக்கும் தெரிந்திருக்க வில்லை. மறுநாள் வந்த வைத்தியரிடம் "இப்போது மகனுக்கு காய்ச்சல் இல்லைப் போலிருக்கிறது, நான் வீட்டுக்கு அழைத்துச் செல்லலாமா.." என்று பெற்றோர் கேட்க, இல்லையில்லை, இங்கே ஐந்து நாட்கள் இருந்தேயாக வேண்டும் என்று வைத்தியர் சொல்ல, என்ன நோய்? என்று தெரியாமல் ஏன் ஐந்து நாட்கள் இங்கே தங்கவேண்டும்? என்று பெற்றோர் தர்க்கப்பட, அப்படியானால் ஆகக் குறைந்தது மூன்று நாட்களாவது தங்க வேண்டும் என்று கட்டளை இட்டிருக்கிறது வைத்தியசாலை நிர்வாகம். கொசுக்கடியுடன் கூடிய தங்கும் அறைக்காக ஒரு நாளைக்கு இலங்கைப் பணத்தில் நாற்பதினாயிரம் ரூபாய்களும், நாளொன்றுக்கு மருந்துக்கு பதினைந்தாயிரம் ரூபாய்களுமாக அறவிட்ட பின்பே சிறுவனை வெளியே செல்ல அனுமதித்திருக்கிறார்கள்.

அதாவது தனியார் வைத்திய சாலைகளுக்குள் நுழைந்தால் ஆகக் குறைந்தது ஒரு இலட்ச ரூபாவைப் பறித்தெடுக்காது வெளியே செல்ல அனுமதிக்க மாட்டார்கள் என்பது எழுதப்படாத விதியாகும். அதுவும் நீங்கள் ஐரோப்பியக் குடிமகன் என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் அதோ கதிதான். பணமிருப்பவர் பாதாளம் வரை பாயலாம். ஆனால், அன்றாட உழைப்புக்கே அல்லலுறுபவர்களால் என்னதான் செய்யமுடியும்? அரச வைத்திய சாலைகளில்

# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்

StaR-Impex




Rabeena Since 1986 We've Mastered Taste

Aachi The Mother of Good Taste

BTM

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

TRS ASIA'S FINEST FOODS




MDH · Laziza International · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · AKASH Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru Brand · AROY-D · MTR · AASHIRVAAD · Pillsbury · PATAK'S Original · Laila

சிகிச்சைக்கு நீண்ட நாளெடுக்கும் என்பதோடு மட்டுமன்றி, அங்கே தங்குமிடம் மற்றும் கழிப்பிட வசதி என்பனவற்றில் தூய்மை இருக்காது என்பதுவே பணமுள்ளவர்கள் தனியார் வைத்திய சாலைகளை நாடுவதற்கான காரணங்களாகும்.

வன்னிப் பெருநிலப்பரப்பின் அரச வைத்திய சாலைகளில் எங்குமே ஓ - சுயல வசதியோ அன்றி, ஊடுகதிர் கருவிகளோ கிடையாது. ஆனால், நாளொன்றுக்கு அங்கே அனுமதிக்கப்படும் நோயாளர்கள் பலர். வாரக்கணக்கில் வைத்திருந்து பார்த்துவிட்டு, இயலாத நிலையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்புகிறார்கள். வன்னிப்பெருநிலப் பரப்பின் குடிசனத் தொகைக்கு கிளிநொச்சியின் அரச வைத்தியசாலை மேம்பட்ட வசதிகளை உடையதாக இருக்கவேண்டும். ஆனால் அங்கே நோயாளிகளுக்குக் கட்டில்களே கிடையாது. இரண்டு மருத்துவ ஊர்திகளே அங்குமிங்குமாக ஓடித்திருக்கின்றன. வன்னியின் பெருநிலப்பரப்பிற்கு இரண்டு மருத்துவ ஊர்திகள் இங்கனம் போதுமானதாக இருக்கும் என்பதை யார் திட்டமிட்டார்களோ? தெரியவில்லை.

அங்கே பணிபுரியும் வைத்தியர்கள் சிலர், தனியார் வைத்திய சாலைகளிலும் பணிபுரிகிறார்கள். காலை எட்டு மணியிலிருந்து மாலை நான்கு மணிவரை அரச வைத்திய சாலையிலும், நான்கு மணியிலிருந்து இரவு பத்துமணி வரை தனியார் வைத்திய சாலையிலும் பணிபுரியும் வைத்தியர்கள் பலர். அவர்களுக்கு அரச வைத்தியசாலை என்பது வெறுமனே கையெழுத்து வைக்கும் இடம் மட்டுமே!. அங்கே கையெழுத்துக்கு மாத ஊதியம் உண்டு. ஆனால் அவர்களுக்கான அதிக வருவாய் தனியார் வைத்திய சாலைகளில் மட்டுமே!. அப்படியாயின் எவ்வாறு அரசவைத்தியசாலைகளில் அவர்கள் சிரத்தையோடு பணிபுரிவார்கள்? என்பதை நான் சொல்லி நீங்கள் அறியவேண்டியதில்லை.

மந்திகை வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவில், ஒரு குழந்தைக்கான மகப்பேற்றுச் சிகிச்சையின் போது, குழந்தையின் முதுகில் கத்தியால் காயம் ஏற்பட்டிருக்கிறது. மறுநாள் குழந்தையின் பெற்றோர் வைத்தியர்களிடம் விவரம் கேட்டபோது, அது ஏற்கனவே குழந்தையின் முதுகில் இருந்த காயம் என்று பொய்கூறிச் சமாளித்திருக்கிறது வைத்தியசாலை நிர்வாகம். அந்தக் குழந்தைக்கு இன்னும் அந்தக் காயம் மாறவில்லை என்று துடித்த வண்ணமே இருக்கிறார்கள் பெற்றோர்கள். ஒரு குழந்தையின் பிறப்பைக் கூட சரியாக நிகழ்த்தத் தெரியாத, சரியாகப் பயிற்றுவிக்கப்படாத வைத்தியர்கள் அங்கே இருக்கிறார்களோ என்ற சந்தேகம் இப்போது பலருக்குள் உருவாகிவிட்டது.



ஒருவிதத்தில் நோக்கினால், இந்த நிலையானது, தனியார் வைத்திய சாலைகளை நோக்கி மக்களை ஓடவைக்கும் என்பதில் ஐயமில்லை. “மந்திகையில் உப்பிடிச் செய்து போட்டாங்களாம்” ஊர் முழுக்க கதையைப் பரப்பியதும் தனியார் வைத்திய சாலையில் பணிபுரியும் ஒரு வைத்தியரே ஆவார். இங்கே போட்டால், அங்கே விளையும் என்பது அவருக்குத் தெரியாதா என்ன..? நல்ல சீதனத்தோடு திருமணம் முடித்த அந்த வைத்தியர், இன்னமும் நாலு காசு பார்க்க ஆசைப்படுவதில் தவறேதுமில்லையே.

இதேபோல, யாழ்ப்பாணத்தில் இன்னுமொரு குழந்தைக்கு தவறான ஊசியை ஏற்றி இருக்கிறார்கள். குழந்தை இப்பொழுது அநுராதபுரம் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. யாழில் பணிபுரியும் ஒரு சிங்களத் தாதியே இந்தத் தவறைச் செய்ததாக வைத்திய அதிகாரி கூறினாலும், அவர் யார்? என்பதை பெற்றோருக்குக் கூறவில்லையாம். தடுப்பிலிருந்து வெளிவந்து திருமணம் முடித்த ஒரு போராளிக்கு நீண்ட காலத்தின் பின் பிறந்த குழந்தைக்கு இந்நிலையெனில் அந்தத் தந்தையால் எவ்வாறு இதைத் தாங்கிக்கொள்ள முடியும்? என்பதை நினைத்துப்பாருங்கள்.

கிளிநொச்சியில் வயிற்றுவலியால் அனுமதிக்கப்பட்ட ஒருவரது வயிற்றுக்குள் என்ன இருக்கிறது? என்பதை அறிவதற்கு மூன்று வாரங்கள் பொறுத்திருக்கச் சொல்கிறார்களாம். ஒரு சாதாரண வயோதிப மனிதரால், மூன்று வாரங்கள் உணவேதும் அருந்தாமல் எவ்வாறு உயிர்வாழ முடியும் என்பதை இவர்கள் சிந்திப்பதில்லையா..? அல்லது அது பற்றி அவர்களுக்கு கரிசனை கிடையாதா..? நெடுங்கேணியில் பாம்பினால் கடிபட்ட ஒரு

# ImmoFinance
## Suisse GmbH





Contact :

**Selvaratnam Mathan**

- புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
- வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
- சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
- முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்



076 303 22 16

mathan@gmx.ch

வாலிபரை, மருத்துவ ஊர்திக்காக காக்க வைத்திருந்த நிலையில், அவரை மருத்துவ ஊர்தியில் உடனடியாக மேல்வைத்திய சாலைக்கு அனுப்பாது, வைத்திய மேலதிகாரிக்கு நன்கு பழக்கப்பட்ட ஒருவரின் தாய்க்கு (சாதாரண கால்முறிவு) முன்னுரிமை கொடுத்து, அனுப்பி வைப்பதை எந்த வகைக்குள் சேர்க்க இயலும்? கால் முறிந்த நிலையில் உள்ள ஒருவருக்கா? அல்லது பாம்பினால் கடிபட்ட ஒருவருக்கா? திடுநேர்கை அதிகம் என்பதைப் புரிந்துகொள்ளாத ஒருவரா வைத்திய அதிகாரியாக இருக்கிறார்..?

இப்போதெல்லாம் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அரச வைத்திய சாலைகளில் சிங்கள வைத்தியர்கள் மற்றும் தாதுக்களும் நிரம்பி வழிகிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, இவர்கள் பலர் வைத்தியப் பட்டப்படிப்பை மூன்று வருடங்கள் இரசியாவில் கற்று முடித்தவர்கள். குறிப்பாக இவர்களை தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அரச வைத்திய சாலைகளுக்கு நியமனம் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள் என்பதும் ஓரளவு உண்மைதான். ஆனால், அங்கே இருக்கும் தமிழ் வைத்திய கலாநிதிகள், தனியார் வைத்திய சாலைகளைக் கட்டிக் கொண்டு அங்கே பணிபுரிவதுதான் இப்போது அதிகமாகி விட்டது.

யாழில் மட்டும் முன்னணி வைத்தியர்கள் மூவர் இணைந்து நடத்திவரும் தனியார் வைத்திய சாலை ஒன்றில், நோயாளிக்கு ஒதுக்கப்படும் அறைக்கு மட்டும் ஒரு நாளைக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் அறவிடுகிறார்கள். அதை விட மருத்துவக்கூலி என்பது வேறு. ஒரு வாரம் அனுமதிக்கப் பட்டால் இலங்கைப் பணத்திற்கு இரண்டு இலட்சம் சாதாரணமாக அவர்கள் உழைத்து விடுவார்கள். சரி, காசு போனால் போகட்டும், உயிர் பிழைத்தால் போதுமானது என்று அந்தரப்பட்டு தனியார் வைத்திய சாலையில் நுழைபவர்களுக்கு ஒரு விடயம் மட்டும் புரிவதில்லை. தனியார் வைத்திய சாலையில் ஒருவாரம் வைத்திருந்து இயலாதென்று கையை விரித்தால் மீண்டும் அரச வைத்திய சாலைக்கே அவர்கள் ஓடவேண்டும். ஆனால், அப்போது அங்கே கையை விரித்து விடுவார்கள்.



இலவச மருத்துவம் தரும் வைத்திய சாலைகளையே மக்கள் நம்பிக்கையோடு நாடவேண்டும். தனியார் வைத்தியசாலைகளை முடிந்த வரை தவிர்த்து விடுவோமானால், சகல வியாபாரிகளும் தனியார் வைத்திய சாலையை இழுத்து மூடும் நிலை வரும். அன்றுதான் ஏழைகளுக்கும் சரியான நீதியான மருத்துவம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. உயிர்காக்கும் மருத்துவம் என்பது ஒரு நாட்டில் அவசியமான மக்கள் சேவை. அதில் பணம் பார்க்க ஆரம்பித்து விட்டால் யாரும் இலகுவில் உயிர் பிழைக்க முடியாது. இலங்கையிலும், தமிழீழத்திலும் மருத்துவத்தில் பணம் பார்க்கும் நடைமுறை ஆரம்பித்துவிட்டது. இனி அங்கே உயிர்களைப் பற்றி யாரும் கவலைப்படப்போவதில்லை.


ஆசியா சமுத்திரம்
Asiatischer Supermarkt

R.RAGUNATHAN
Parkhofstrasse 101
41836 Hückelhoven
+ 49 24 33 / 44 69 007

T. ANBALAGAN
Sittardstrasse 21
41061 Mönchengladbach
+ 49 21 61 / 90 28 388

Lyca TV · VALUTRANS MONEY TRANSFER · Ria · MoneyGram · TEMPO MONEY TRANSFER

IBAN : DE55 3907 0024 0474 1153 00 BIC : DEUT DE DB 390

# YOBBANI LEBENSMITTEL & KIOSK

Öffnungszeiten :
Mo - Do : 09:00 - 22:00
Fr & Sa : 09:00 - 00:00
So & Feiertag : 12:00 - 19:00

துரித பணமாற்றுச் சேவை

VALUTRANS MONEY TRANSFER

**Grandweg 13, 59494 Soest**

அனைத்து விதமான மளிகை பொருட்கள்,
உடன் மரக்கறி வகைகள் மிகக் குறைந்த விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்



email : yobbani2017@gmail.com
Tel : 029219445412
Mobile : 0176 41648852



# MEERHAA AYURVEDA

## GESUNDHEITS PRAXIS

Panchakarama Treatment Ayurvedic Beauty SPA

**DR. SASHIMEERA SIVARASALINGAM**



Tel. 076 426 34 44

INDIAN AYURVEDA THERAPIE

- Kopfschmerzen (Migrane)
- Depressionen
- Muskelverhärtungen
- Arthrose
- Allergie
- Diabetes
- Bluthochdruck
- Schlafstörungen
- Mudigkeit

Krankenkasse Wädenswil, SWICA, sanitas, INTRAS, ASSURA, rhenusana, sympany, FKB, Groupe Mutuel

கவலை வேண்டாம் உங்கள் மருத்துவக் காப்புறுதி
ஊடாக கட்டணம் செலுத்தலாம்

உங்கள் உடலில் ஏற்படும்
வலிகள், நோக்கள்
என்பவற்றிலிருந்து
விடுதலை அடைந்து
மகிழ்ச்சியான வாழ்வை
வாழ்வதற்கு எம்மை நாடுங்கள்



meena_1882@hotmail.com www.meerhaaayurvrda.ch

KRANKENKASSE ANERKANNT

முறைப்படி ஆயுர்வேத சிகிச்சை படித்தவர்களால்தான் வைத்தியம் பார்க்கப்படுகிறது.

Kanzleistrasse 115, 8004 Zurich. Natel : 076 426 34 44



பூமிபுத்திரன்

# ஜமால் கஷோக்கி படுகொலை உணர்த்தும் சேதி

உண்மையைப் பேசும் ஊடகவியலாளர்களுக்கு உலகம் பாதுகாப்பற்றது என்பதை நிரூபிக்கும் மற்றொரு சம்பவம் துருக்கியில் நடைபெற்றுள்ளது. சவூதி அரேபியப் பிரசையும், அந்த நாட்டு மன்னர் பரம்பரையை எதிரித்துப் போர்க்கொடி உயர்த்தியதால் உயிர் ஆபத்துக்கு ஆளாகி, நாட்டை விட்டுத் தப்பியோடி அஞ்ஞாதவாசம் புரிந்து வந்தவருமான, பிரபல ஊடகர் ஜமால் கஷோக்கி, இஸ்தான்புல் நகரில் உள்ள சவூதி அரேபியத் தூதரகத்தில் வைத்துக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு உள்ளார். பல நாட்கள் கடந்தும் அவரது கொலை எவ்வாறு நடைபெற்றது? அவரது உடலுக்கு என்ன நடந்தது? என்பது போன்ற விபரங்கள் மர்மமாகவே இருந்து வருகின்றது.

உலகின் பல பாகங்களிலும் ஊடகவியலாளர்களின் கொலைகள் அவ்வப்போது நடைபெற்றே வந்தாலும் கூட, ஒரு சிலரின் கொலைகளே உலகின் கவனத்தைப் பெறுகின்றன. அந்த வகையில் ஜமால் கஷோக்கி அவர்களின் கொலை, உலகின் கவனத்தைப் பெற்றிருப்பது விழிப்புணர்ச்சியைத் தருகின்றது. அத்தோடு, அவரின் கொலையை ஒட்டி - இதுகாலவரை உலகின் கவனத்தில் இருந்து மறைக்கப்பட்டு வந்த - யேமன் யுத்தம் தொடர்பான கரிசனையும், உலகின் கவனத்திற்குரிய பேசுபொருளாக மாறியிருக்கின்றன. துன்பத்திலும் இன்பம் என்பதைப் போன்று மனித உரிமைகளில் உண்மையான கரிசனைக் கொண்டிருப்போரின் மனங்களில் பாலை வார்த்த கதையாக இது அமைந்திருக்கின்றது.

மறுபுறம், மத்திய கிழக்கு நாடுகளின் அரசியல் செல்நெறியிலும் இந்தக் கொலை விவகாரம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

ஒரு காலத்தில் சவூதியின் முடிக்குரிய இளவரசர் முகம்மட் பின் சல்மான் அவர்களின் குடும்பத்தினருக்கு மிகவும் நெருக்கமான ஒரு ஊடகவியலாளராக இருந்தவரே ஜமால் கஷோக்கி. பின்னாளில், மன்னர் குடும்பத்தினரின் அதிருப்தியாளராக மாறிய அவர், அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்தார். அங்கே வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் செய்தியாளராக மாறினார்.

துருக்கியைச் சேர்ந்த தனது காதலியை திருமணம் செய்வதற்காக, ஒரு அரசுச் சான்றிதழைப் பெறுவதற்காக அக்டோபர் 2ஆம் திகதி இஸ்தான்புல் நகரில் உள்ள சவூதி உதவித் தூதுவர் அலவலகத்திற்குச் சென்றவர், மீண்டும் திரும்பி வரவில்லை. வெளியே காத்திருந்த அவரது காதலி உடனடியாகத் தகவல் தந்ததை அடுத்து, செய்தி காட்டுத் தீயாகப் பரவியது.

ஏற்கனவே அன்றைய தினம் அவர் தூதுவராலாயத்தில் அனுமதி பெற்றிருந்த விடயத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டு, சவூதி அரேபியாவில் இருந்து துருக்கி வந்த புலனாய்வாளர்கள் அவரைக் கொலை செய்து, சடலத்தை மறைத்து விட்டு, அன்றைய தினமே நாட்டை விட்டு வெளியேறியதாக முதற்கட்டத் தகவல்கள் வெளியாகின. அப்படி எதுவும் நடக்கவில்லை. தனது அலுவலை முடித்துக் கொண்டு, ஜமால் கஷோக்கி தூதுவராலாயத்தை விட்டு வெளியேறி விட்டார் என்பதே சவூதி அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது.

நாளுக்கு நாள் எழுந்த உலக நாடுகளின் கண்டனத்தைத் தொடர்ந்து, உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டிய நிலை சவூதி அரேபியாவிற்கு உருவானது. அக்டோபர் 2ஆம் திகதி நடைபெற்ற சம்பவத்தை அக்டோபர் 19ஆம்

LINUS media

IPTV

**ஐரோப்பாவின் முன்னனி IPTV களை வாங்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் எம்மைத் தொடர்பு கொள்ளவும்**






www.chitramtv.eu

chitram 4K 4K mini ULTRA HD

**நீங்கள் வீட்டில் இருந்தபடியே ONLINE மூலம் எம்மிடம் புதுப்பித்துக் கொள்ள முடியும்**

மேலதீக தொடர்புக்கு...

**www.linusmedia.nl**

**0031 621 604 168**

**0031 620 897 414**

திகதியே சவூதி அரேபியா ஒத்துக் கொண்டது. அதுவும், கண்துடைப்பைப் போன்று மேலிடத்திற்குத் தெரியாமல் சம்பவம் நடைபெற்றதாக முடிக்குரிய இளவரசர் அறிவிப்புச் செய்ததோடு, சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்து இருந்தார்.

எனினும், சவூதி அரேபியாவின் சமாளிப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத மேற்குலகம், சவூதி அரேபியாவிற்கான ஆயுத விற்பனையைத் தடைசெய்வது தொடர்பாக ஆலோசித்து வருகின்றது. யேர்மனி முதல் நாடாக தனது ஆயுத விற்பனையை நிறுத்துவதாக அறிவித்து உள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும் இது தொடர்பாக ஆலோசித்து வருகின்றது. கனடாவும் ஆயுத விநியோகத்தை இடைநிறுத்துவதாக அறிவித்து உள்ளது.

ஆயுத விற்பனை நிறுத்தம் தொடர்பான குரல்கள் அமெரிக்காவில் இருந்தே முதன்முதலில் எழுந்த போதிலும், நாட்கள் செல்லச் செல்ல அந்தக் குரலின் தொனியில் காட்டம் குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. தான் ஆயுத விற்பனையை நிறுத்த, அந்த இடத்தை ரஸ்யா கைப்பற்றிக் கொள்ளக் கூடும் என்ற ஐயம் அமெரிக்கத் தரப்பில் எழுந்துள்ளமையே இதற்கானக் காரணமாக இருக்கக் கூடும்.

எனினும், சவூதி அரேபியா தொடர்பான மேற்குலகின் வெளியுறவுக் கொள்கை ஜமால் கஷோக்கியின் படுகோலைக்குப் பின்னான காலப் பகுதியில் முன்னரைப் போல இருக்காது என நம்பலாம்.

இதேவேளை, பிந்திக் கிடைத்த தகவல்கள் ஜமால் கஷோக்கியின் கொலை நன்கு திட்டமிட்டே நடைபெற்றதாகக் கோடிகாட்டுகிறது. தூதுவராலயத்திற்கு வந்த ஜமால் கஷோக்கியை முகமூடி அணிவித்து பலவந்தமாகக் கடத்திச் செல்ல



முயற்சித்த வேளையில் அவர் மூச்சுத் திணறி இறந்ததாகவும், எதிர்பாராத இந்த நிகழ்வைச் சமாளிக்கும் நோக்குடன் கஷோக்கி அணிந்திருந்த உடைகளை அணிந்தவாறு, வேறொருவர் தூதவராலயத்தின் பின்வாசல் வழியாக வெறியேறுவது போலச் சோடிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. பின்னர், உடலும் துண்டு துண்டாக வெட்டப்பட்டு, சிறு சிறு பொதிகளாக்கப்பட்டு வெளியே கொண்டு செல்லப்பட்டு, மறைக்கப்பட்டு உள்ளது.

நவீன காலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாக மனிதன் சொல்லிக் கொண்டாலும் கூட, அதிருப்தியாளர்களைக் கொலை செய்தேனும் அரசாங்கங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகள் இன்றுவரை நீடித்தே வருகின்றமை, காலக் கொடுமையே அன்றி வேறில்லை. விக்கி லீக்ஸ் நிறுவனர் ஜூலியஸ் அசான்ஜே கடந்த ஆறு வருடங்களாக லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதுவராலயத்தில் அடைபட்டுக் கிடப்பதுவும், அமெரிக்க உளவுப் பிரிவின் முன்னைநாள் பணியாளரான எட்வட் ஸ்னோடன் ரஸ்யாவில் தஞ்சம் அடைந்திருப்பதுவும் தற்செயல் நிகழ்வுகள் அல்ல என்பது ஜமால் கஷோக்கியின் கொலை உணர்த்தும் நடைமுறை யதார்த்தமாக உள்ளது.

## ஜனநாயகப் படுகொலை தொடர்ச்சி....

கொழும்பு மாநகரில் ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டமை, எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு முன்னணி உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகள் - ஜனநாயகத்தை நிலைநாட்டுவது என்ற அம்சத்தின் பேரால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க முன்வந்தமை போன்ற விடயங்கள் மகிந்த தரப்பிற்குக் கவலைதரும் விடயங்களாக அமைந்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு ஏதுவாக நாடாளுமன்றக் கூட்டத்தொடரை மைத்ரி ஒத்தி வைத்ததை அடுத்து கட்சிதாவும் படலங்கள் ஆரம்பமாகின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச. வியாழேந்திரன் கூட கட்சிதாவி பிரதி அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்றார். இந்த நிலையில், மேற்குலகில் இருந்து வந்த அறிக்கைகளும், காட்டிய சமிக்ஞைகளும் மகிந்த தரப்பிற்குச் சாதகமாக இருக்கப் போவதில்லை என்பதற்குக் கட்டியம் கூறி நின்றன. இதனால் உற்சாகம் அடைந்த ரணில் தரப்பு மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக ரணிலைக் கைவிட்டுப் போனவர்கள் மீளவும் திரும்பிவரும் நிலை உருவாக உள்ளது. இந்நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அறிவித்தலில் மைத்ரி கையொப்பம் இட்டிருப்பதாக நவம்பர் 9ஆம் திகதி தகவல்கள் வெளியாகின.

113 என்ற பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு 8 உறுப்பினர்கள் குறைவாக இருப்பதாக மகிந்த தரப்பு தெரிவித்ததை அடுத்தே அரசுத் தலைவர் இந்த முடிவுகளை எடுத்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன. 19 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் இத்தகைய ஒரு அறிவித்தலை விடுக்கும் உரிமை அரசுத் தலைவருக்கு உள்ளதா? இத்தகைய அறிவித்தலுக்கு ரணில் தரப்பின் எதிர்வினை எதுவாக இருக்கும்? ரணிலை ஆதரிக்கும் பன்னாட்டு சமூகத்தின் அடுத்த நகர்வு எதுவாக இருக்கும்? உள்ளிட்ட பல கேள்விகள் எழுகின்றன. பதில்களுக்காக உங்களோடு நானும் காத்திருக்கிறேன். ஆனால், இதுவரை நடந்த நிகழ்வுகளில் வெளிவரும் சேதி சிறி லங்காவில் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டு விட்டது என்பதே.

CENTURY
TRAVELS GMBH

Emirates

Emirates Sommer 2018

**SRILANKA -COLOMBO**

**Direct Booking Nr.: 017621682149**

# ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச் சலுகை

## 2019ம் ஆண்டின் கோடைகால முன்பதிவுகள் ஆரம்பம்



# Juli-2019 ab599€

அங்கத்தவர்களாக இணையும் வர்த்தகர்களுக்கு விசேட சலுகை (வி.ஐ.பி) உண்டு.

**தொடர்புக்கு 0176 216 82 149**
(Gültig nur mit gewerbe ammeldung)

**Ram Nishanthan Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal**
web : www.centurydravels.de email : info@centurytravels.de

## ஒருவருட Lebara Play அன்பளிப்பு

5 விமானச் சீட்டுகள் வாங்கினால்
ஒரு வருட Lebara Play நீடிப்பு (Renewal)
கூப்பன் அன்பளிப்பாக வழங்கப்படும்

**Niederlassung**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
0231 58 96 557
0201 64888225
Fax : 0231 58 44 665

**Hauptsitz**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225

திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 9.30 முதல்
மாலை 3:30 திறந்திருக்கும்


Radio - by - Phone
நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60
தொலைபேசி இலக்கத்தில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
அழையுங்கள்!
வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!
0221 9888014
01 80140659
044 5133032
0330 332 6349
0787 72527
ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி
மேலதிக விபரங்களுக்கு...
www.etr.fm